www.Padasalai.Net www.CBSEtips.in

புதிய பதிப்பு

# பெங்குயின்

புதிய வடிவில் சிறந்த வழிகாட்டி

# தமிழ் அமுது 8

## முழு ஆண்டு கையேடு



**நூலின் கட்டமைப்பு:**

பாடநூலில் இருப்பது போன்றே கற்றல் நோக்கங்கள், மன வரைபடம், பாடலின் பொருள், பொருள் கூறுக, நூல் வெளி, சரியான விடையை தேர்ந்தெடுத்தல், குறுவினா, சிறுவினா, நெடுவினா, விரிவானம், சிந்தனை வினா, கற்பவை கற்றபின், கூடுதல் வினாக்கள், கடிதம், கட்டுரை, மனப்பாடப் பாடல்கள், அலகுத் தேர்வுகள்.

இலக்கு 100/100

பெங்குயின் பப்ளிகேஷன்

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT:8925612359 www.CBSEtips.in

# பெங்குயின்

# தமிழ் அமுது

# 8

“ புதிய பாடத்திட்டத்தின் படி தயாரிக்கப்பட்டுள்ளது ”

பெங்குயின் பப்ளிகேஷன்ஸ்
ஸ்ரீவில்லிபுத்தூர்

விலை ரூ.246/-

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# முன்னுரை

கடவுளின் ஆசிர்வாதம் இருந்தால் எல்லாம் சாத்தியமே

Dr.A.P.J. அப்துல் கலாம்.

மதிப்பிற்குரிய தாளாளர், தலைமையாசிரியர், தலைமையாசிரியை, முதல்வர் மற்றும் அன்பிற்கினிய தமிழாசிரியப் பெருமக்களே!

நாங்கள் 8 ஆம் வகுப்பிற்கான (பெங்குயின்) தமிழ் அமுது, புதிய பாடத்திட்டத்தின் படி புதிய பதிப்பாக வெளியிடுவதில் மிகவும் பெருமைப்படுகிறோம்.

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமன்று. எதிர்காலவாழ்விற்கும் அடித்தளம். உங்கள் கைகளில் தவழும் பெங்குயின் தமிழ் அமுது உங்கள் மனதிற்கு இதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந்த தமிழ் அமுதில், பாடநூலில் உள்ள வினா மட்டுமில்லாமல் கூடுதலாக சிலவினாக்களும் அரசுத்தேர்வில் எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அனுபவமிக்க ஆசிரியர்களால் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. இதைப் பயன்படுத்துவதால் தேர்விற்கு மட்டுமின்றி வாழ்விலும் போட்டித் தேர்விற்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

எளிய இனிய மொழிநடை, கருத்துகளின் கோர்வையான அழகு,தமிழறிவை வளர்க்கும் சிந்தனைத் துளிகள். கற்பவை கற்றபின் பகுதியும் மனதில் அணிவகுக்கும். இவையெல்லாம் உள்ளடக்கிய எளிய தெளிவான பெங்குயின் தமிழ் அமுதை நன்கு வாசியுங்கள்..... நினைவில் நிலைநிறுத்துங்கள். அரசுப்பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்களை அள்ளிக்குவியுங்கள்.

எங்களுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

இப்படிக்கு
பதிப்பகத்தார்.

www.Padasalai.Net

www.Padasalai.Net FOR ORDERS CONTACT:8925612359 www.CBSEtips.in

# TO ORDERS

## SCHOOLS and TEACHERS

FOR ORDERS CONTACT
8925612359 8643007972
7010414574 8248737898

## STUDENTS

Books can be obtained through VPP

# PAYMENT METHOD

## DIRECT DEPOSIT

| | | |
|---|---|---|
| A/C Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 328150050800129 |
| Bank Name | : | TAMIL NADU MERCANTILE BANK |
| IFSC | : | TMBL0000328 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

| | | |
|---|---|---|
| A/c Name | : | PENGUIN PUBLICATIONS |
| Our A/c No. | : | 39212649923 |
| Bank Name | : | STATE BANK OF INDIA |
| IFSC | : | SBIN0000921 |
| Bank Brach | : | SRIVILLIPUTTUR. |

**After Deposit, please call this no. 8925612359**

## MOBILE PAYMENTS

G Pay

8925612359

PENGUIN PUBLICATIONS

By Any Payment APP

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'PENGUIN PUBLICATIONS'** payable at **Srivilliputtur**

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612999 www.CBSEtips.in

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| மனப்பாடப் பாடல்கள் | | | 1 |
| 1 | மொழி | தமிழ்மொழி வாழ்த்து | 6 |
| | தமிழ் இன்பம் | தமிழ்மொழி மரபு | 11 |
| | | தமிழ் வரிவடிவ வளர்ச்சி | 16 |
| | | சொற்பூங்கா | 23 |
| | | எழுத்துகளின் பிறப்பு | 25 |
| | | அலகுத் தேர்வு | 33 |
| 2 | இயற்கை | ஓடை | 37 |
| | ஈடில்லா இயற்கை | கோணக்காத்துப் பாட்டு | 41 |
| | | நிலம் பொது | 46 |
| | | வெட்டுக்கிளியும் சருகுமானும் | 50 |
| | | வினைமுற்று | 53 |
| | | திருக்குறள் | 60 |
| | | அலகுத் தேர்வு | 65 |
| 3 | அறிவியல், தொழில் நுட்பம் | நோயும் மருந்தும் | 68 |
| | உடலை ஓம்புமின் | வருமுன் காப்போம் | 72 |
| | | தமிழர் மருத்துவம் | 77 |
| | | தலைக்குள் ஓர் உலகம் | 82 |
| | | எச்சம் | 85 |
| | | அலகுத் தேர்வு | 93 |
| 4 | கல்வி | கல்வி அழகே அழகு | 96 |
| | கல்வி கரையில | புத்தியைத் தீட்டு | 99 |
| | | பல்துறைக் கல்வி | 103 |
| | | ஆன்ற குடிப்பிறத்தல் | 109 |
| | | வேற்றுமை | 112 |
| | | அலகுத் தேர்வு | 123 |
| 5 | கலை, அழகியல், பண்பாடு | திருக்கேதாரம் | 126 |
| | குழலினிது யாழினிது | பாடறிந்து ஒழுகுதல் | 131 |
| | | நாட்டுப்புறக் கைவினைக் கலைகள் | 136 |
| | | தமிழர் இசைக்கருவிகள் | 142 |
| | | தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் | 145 |
| | | திருக்குறள் | 153 |
| | | அலகுத் தேர்வு | 155 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| இயல் | பொருண்மை / இயல் | பாடத்தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|
| 6 | நாகரிகம், தொழில் வணிகம் | வளம் பெருகுக | 159 |
| | **வையம்புகழ் வணிகம்** | மழைச்சோறு | 163 |
| | | கொங்குநாட்டு வணிகம் | 168 |
| | | காலம் உடன் வரும் | 173 |
| | | புணர்ச்சி | 178 |
| | | அலகுத் தேர்வு | 184 |
| 7 | நாடு, சமூகம் | படை வேழம் | 187 |
| | **பாருக்குள்ளே நல்ல நாடு** | விடுதலைத் திருநாள் | 192 |
| | | பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் | 196 |
| | | அறிவுசால் ஔவையார் | 200 |
| | | வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும் | 203 |
| | | அலகுத் தேர்வு | 211 |
| 8 | அறம், தத்துவம், சிந்தனை | ஒன்றே குலம் | 214 |
| | **அறத்தால் வருவதே இன்பம்** | மெய்ஞ்ஞான ஒளி | 218 |
| | | அயோத்திதாசர் சிந்தனைகள் | 222 |
| | | மனித யந்திரம் | 228 |
| | | யாப்பு இலக்கணம் | 232 |
| | | திருக்குறள் | 239 |
| | | அலகுத் தேர்வு | 242 |
| 9 | மனிதம், ஆளுமை | உயிர்க்குணங்கள் | 245 |
| | **குன்றென நிமிர்ந்துநில்** | இளைய தோழனுக்கு | 249 |
| | | சட்டமேதை அம்பேத்கர் | 254 |
| | | பால் மனம் | 259 |
| | | அணி இலக்கணம் | 261 |
| | | அலகுத் தேர்வு | 268 |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612359 www.CBSEtips.in



# மனப்பாடச் செய்யுள்

## கவிதைப் பேழை

**இயல் - 1**

### தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே! **- பாரதியார்**

**இயல் - 2**

### ஓடை

ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! - கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும் (ஓடை ஆட...)
பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போராரோடி! (ஓடை ஆட...)
நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி (ஓடை ஆட...)
நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளுழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும் (ஓடை ஆட...)

**- வாணிதாசன்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## திருக்குறள்

### நடுவுநிலைமை

அ.மா.வி 2019

1. தக்கார் தகவிலர் என்பது அவரவர்
2. எச்சத்தால் காணப் படும்.

### கூடா ஒழுக்கம்

4. கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்.

### கல்லாமை

6. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

### குற்றங்கடிதல்

8. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு.

**- திருவள்ளுவர்**

**இயல் - 3**

### நோயும் மருந்தும்

பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்குஉரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்து பிணியுள் பிறவார் பெரிது இன்பமுற்றே.

### வருமுன் காப்போம்

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தமுள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீ அதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே.
காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

**- கவிமணி தேசியவிநாயகனார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



**இயல் - 4**

### கல்வி அழகே அழகு

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார். **- குமரகுருபரர்**

**இயல் - 5**

### பாடறிந்து ஒழுகுதல்

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுதுதல்
அன்பு எனப்படுவது தன்கிளை செறாஅமை
அறிவு எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவு எனப்படுவது கூறியது மறாஅமை
நிறை எனப்படுவது மறை பிறர் அறியாமை
முறை எனப்படுவது கண்ஓடாது உயிர்வௌவல்
பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்.

## திருக்குறள்

### தெரிந்து வினையாடல்

2. இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

### சொல்வன்மை

7. கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்
8. சொல்லுக சொல்லைப் பிறிதுஓர்சொல் அச்சொல்லை
வெல்லும்சொல் இன்மை அறிந்து **- திருவள்ளுவர்**

**இயல் - 7**

## படைவேழம்

### கலிங்கர் தோற்றுச் சிதைந்தோடல்

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே (2)
ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிழலினை வெருவி அஞ்சினர்
அருவர் வருவர் எனா இறைஞ்சினர்
அபயம் அபயம் என நடுங்கியே (3) **- செயங்கொண்டார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in


## இயல் - 8

### ஒன்றே குலம்

அ.மா.வி 2019

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே


படமாடக் கோயில் பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்குஅங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்குஅது ஆமே. **- திருமூலர்**


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in


இயல் ஒன்று

# தமிழ் இன்பம்



**கற்றல் நோக்கங்கள்**

- செய்யுளைப் படித்து அதன் நயங்களைப் போற்றும் திறன் பெறுதல்.
- தமிழ்மொழியின மரபுகளை அறிந்து பயன்படுத்துதல்.
- தமிழ எழுத்துகளின் வளர்ச்சி நிலைகளை அறிதல்.
- ஓரெழுத்து ஒரு மொழியை அடிப்படையாகக் கொண்டு சொல்லாட்சித் திறனை வளர்த்தல்.
- சொற்களின் பிறப்பு முறைகளை அறிந்து உரிய முறையில் ஒலித்தல்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in




இயல் ஒன்று

கவிதைப்பேழை

# தமிழ்மொழி வாழ்த்து

Z3RN9I

## மனவரைபடம்




## பாடல்

*வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!

வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!*

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

- பாரதியார்

## சொல்லும் பொருளும்

நிரந்தரம் - காலம் முழுமையும்
வைப்பு - நிலப்பகுதி
சூழ்கலி - சூழந்துள்ள அறியாமை இருள்
வண்மொழி - வளமிக்க மொழி
இசை - புகழ்
தொல்லை - பழமை, துன்பம்.

## பாடலின் பொருள்

- தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க!
- ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க!



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



- ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க!
- எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க!
- எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்!
  அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைக!
- பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க!
- தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க!
- வானம்வரை உள்ளடக்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

## ஆசிரியர் குறிப்பு

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதியார் |
| இயற்பெயர் | : | சுப்பையா (அ) சுப்பிரமணியன் |
| பெற்றோர் | : | திரு. சின்னச்சாமி, திருமதி. இலக்குமி அம்மையார் |
| ஊர் | : | தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் |
| பிறப்பு | : | 11.12.1882 |
| நடத்திய இதழ் | : | இந்தியா, விஜயா |
| சிறப்பு | : | கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் |
| சிறப்புப் பெயர் | : | பாரதி (பட்டம்), ஷெல்லி தாசன், தேசிய கவிஞர், மகாகவி |
| புகழ் மொழிகள் | : | சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார். |
| படைப்புகள் | : | **உரைநடை நூல்கள் :**<br>சந்திரிகையின் கதை, தராசு<br>**கவிதை நூல்கள் சில :**<br>கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள் |
| இறப்பு | : | 11.09.1921. |

## கற்பவை கற்றபின்

**1. ‘தமிழ்மொழி வாழ்த்து’ - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

*வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!
வாழிய வாழியவே!
வான மளந்தது அனைத்தும் அளந்திடு
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!*



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in



சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**2. படித்துச் சுவைக்க.**

**செந்தமிழ் அந்தாதி**

செந்தமிழே! செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும்
நந்தா விளக்கனைய நாயகியே! - முந்தை
மொழிக்கெல்லாம் மூத்தவளே மூவேந்தர் அன்பே!
எழில்மகவே! எந்தம் உயிர்.

உயிரும்நீ; மெய்யும் நீ; ஓங்கும் அறமாம்
பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ;
வீரம்நீ; காதல்நீ;ஈசன் அடிக்குநல்
ஆரம்நீ; யாவும்நீ யே!

- து. அரங்கன்.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ______________.
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி **[விடை : வைப்பு]**
2. ‘என்றென்றும்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) என் + றென்றும் ஆ) என்று + என்றும்
   அ) என்றும் + என்றும் ஈ) என் + என்றும் **[விடை : என்று + என்றும்]**
3. ‘வானமளந்தது’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) வான + மளந்தது ஆ) வான் + அளந்தது
   இ) வானம் + அளந்தது ஈ) வான் + மளந்தது
   **[விடை : வானம் + அளந்தது]**
4. அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.
   அ) அறிந்ததுஅனைத்தும் ஆ) அறிந்தனைத்தும்
   இ) அறிந்ததனைத்தும் ஈ) அறிந்துனைத்தும்
   **[விடை : அறிந்ததனைத்தும்]**
5. வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) வானம்அறிந்து ஆ) வான்அறிந்த
   இ) வானமறிந்த ஈ) வான்மறிந்த **[விடை : வானமறிந்த]**

### தமிழ்மொழி வாழ்த்து - இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை ★ எடுத்தெழுதுக ★

| | |
|---|---|
| வாழ்க | வான மளந்தது |
| வாழிய | வண்மொழி |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| எங்கள் | வாழ்க | வானம் |
| என்றென்றும் | வாழ்க | வளர்மொழி |

## ★ குறுவினா ★

**1. தமிழ் எங்குப் புகழ் கொண்டு வாழ்கிறது?**

தமிழ் ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்டு வாழ்கிறது.

**2. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**

தமிழ் வானம் வரை உள்ளடங்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளர்கிறது.

## ★ சிறுவினா ★

**3. தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.**

- தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க!
- ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழி வாழ்க!
- ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து, புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க!
- எங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழி உலகம் உள்ள வரையிலும் வாழ்க!
- எங்கும் சூழ்ந்துள்ள அறியாமை இருள் நீங்கட்டும்!
  அதனால் தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைக!
- பொருந்தாத பழைய கருத்துகளால் உண்டாகும் துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க!
- தமிழ்மொழி வாழ்க! தமிழ்மொழி வாழ்க! என்றென்றும் தமிழ்மொழி வாழ்க!
- வானம்வரை உள்ளடக்கியுள்ள எல்லாப் பொருண்மைகளையும் அறிந்து மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க!

## ★ சிந்தனை வினா ★

**4. பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?**

- தமிழ்மொழி எண்ணற்ற இலக்கிய இலக்கண வளங்களைக் கொண்ட மொழியாகும்.
- தமிழ்மொழி அழியாத மொழியாகவும், சிதையாத மொழியாகவும், என்றும் உயிர்ப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரே மொழியாகும்.
- தமிழ்மொழி மிகப்பழமையான, வளமையான மொழி ஆகும்.
- தமிழ்மொழி சொல்வளம், கருத்து வளம், பண்பாட்டு வளம் நிறைந்த மொழியாகும்.
- எனவேதான், இத்தகைய வளமுடைய மொழியாக விளங்குவதால்தான் தமிழை பாரதியார் வண்மொழி என்ற அழைக்கிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612359 www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. இசை என்பதன் பொருள் ___________. **[விடை : புகழ்]**
2. கருத்தை அறிவிக்கும் கருவியே ___________ ஆகும். **[விடை : மொழி]**
3. 'சிந்துக்குத் தந்தை' என அழைக்கப்படுபவர் ___________. **[விடை : பாரதியார்]**
4. 'ஏழ்கடல்' என்ற சொல்லைப் பிரிப்பது ___________. **[விடை : ஏழு + கடல்]**
5. 'வண்மொழி' என்னும் சொல்லைப் பிரிப்பது ___________. **[விடை : வளமை + மொழி]**

### குறுவினா

**1. எத்தகைய இருள் நீங்க வேண்டும்?**

நம்மைச் சூழ்ந்துள்ள அறியாமை என்னும் இருள் நீங்க வேண்டும்.

**2. தமிழ்மொழி எவ்வாறு சிறப்படைய வேண்டும்?**

தமிழ்மொழி உலகம் முழுவதும் மேன்மை பெற்று சிறப்படைய வேண்டும்.

**3. பாரதியார் நடத்திய இதழ்கள் யாவை?**

- இந்தியா
- விஜயா

**4. பன்முகத்திறன் கொண்டவர் பாரதியார் எவ்வாறு?**

- கவிஞர்
- எழுத்தாளர்
- இதழாளர்
- போராட்ட வீரர்
- சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர்.

### சிறுவினா

**1. பாரதியார் பற்றி சிறுகுறிப்பு தருக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பாரதியார் |
| இயற்பெயர் | : | சுப்பையா (அ) சுப்பிரமணியன் |
| பெற்றோர் | : | திரு. சின்னச்சாமி, திருமதி. இலக்குமி அம்மையார் |
| ஊர் | : | தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் |
| பிறப்பு | : | 11.12.1882 |
| நடத்திய இதழ் | : | இந்தியா, விஜயா |
| சிறப்பு | : | கவிஞர், எழுத்தாளர், இதழாளர், சமூகச் சீர்திருத்தச் சிந்தனையாளர், விடுதலைப் போராட்ட வீரர் |
| சிறப்புப் பெயர் | : | பாரதி (பட்டம்), ஷெல்லி தாசன், தேசிய கவிஞர், மகாகவி |
| புகழ் மொழிகள் | : | சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார். |
| படைப்புகள் | : | **உரைநடை நூல்கள் :** சந்திரிகையின் கதை, தராசு |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in



**கவிதை நூல்கள் சில :**
கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாப்பா பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதியார் கவிதைகள்

இறப்பு : 11.09.1921.


கவிதைப்பேழை

இயல் ஒன்று

# தமிழ்மொழி மரபு

DP8232

**மனவரைபடம்**




**பாடல்**

நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்.
- தொல். 1579

மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை
மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன
- தொல். 1580

மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்
- தொல். 1581
- தொல்காப்பியர்



**சொல்லும் பொருளும் :**

விசும்பு - வானம்
மயக்கம் - கலவை
இருதிணை - உயர்திணை, அஃறிணை
வழாஅமை - தவறாமை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



| | | |
|---|---|---|
| மரபு | - | வழக்கம் |
| திரிதல் | - | மாறுபடுதல் |
| செய்யுள் | - | பாட்டு |
| தழாஅல் | - | தழுவுதல் (பயன்படுத்துதல்) |
| ஐம்பால் | - | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |

## பாடலின் பொருள்

இவ்வுகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும். இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவையே ஆகும். உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும் ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு.

திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும். இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.

தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

## நூல் வெளி - தொல்காப்பியம்

தொல்காப்பியத்தின் ஆசிரியர் **தொல்காப்பியர்.** தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் **தொல்காப்பியம்** ஆகும். இந்நூல் **எழுத்து, சொல், பொருள்** என்னும் மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் **ஒன்பது இயல்**களைக் கொண்டது. பொருளதிகாரத்தின் **மரபியலில்** உள்ள மூன்று நூற்பாக்கள் (91, 92, 93) இங்குத் தரப்பட்டுள்ளன.

### அளபெடை பற்றிய செய்தி

புலவர்கள் சில எழுத்துகளை அவற்றுக்கு உரிய மாத்திரை அளவைவிட நீண்டு ஒலிக்குமாறு பயன்படுத்துவது உண்டு. இப்பாடலில் இடம்பெற்றுள்ள **வழாஅமை, தழாஅல்** ஆகிய சொற்களில் உள்ள **ழா** என்னும் எழுத்தை மூன்று மாத்திரை அளவு நீட்டி ஒலிக்க வேண்டும். அதற்கு அடையாளமாகவே 'ழா' வை அடுத்து 'அ' இடம் பெற்றுள்ளது. இவ்வாறு உயிர் எழுத்து நீண்டு ஒலிப்பதை **உயிரளபெடை** என்பர். இதனைப் பற்றி உயர் வகுப்புகளில் விரிவாக அறிந்து கொள்ளலாம்.

### விலங்குகளின் இளமைப் பெயர்கள் - ஒலி மரபு

| வ.எண் | விலங்குகள் | இளமைப் பெயர்கள் | ஒலி மரபு |
|---|---|---|---|
| 1. | புலி | பறழ் | உறுமும் |
| 2. | சிங்கம் | குருளை | முழங்கும் |
| 3. | யானை | கன்று | பிளிறும் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612359 www.CBSEtips.in



| | | | |
|---|---|---|---|
| 4. | பசு | கன்று | கதறும் |
| 5. | ஆடு | குட்டி | கத்தும் |
| 6. | நாய் | குட்டி | குரைக்கும் |
| 7. | கரடி | குட்டி | கத்தும் |

## கற்பவை கற்றபின்

**1. பறவைகளின் ஒலி மரபுகளை எழுதி வருக.**

(எ.கா.) காகம் கரையும்.

அ) ஆந்தை அலறும்
ஆ) கிளி பேசும்
இ) கோழி கொக்கரிக்கும்
ஈ) மயில் அகவும்
உ) புறா குனுகும்
ஊ) குயில் கூவும்
எ) கூகை குழறும்
ஏ) சேவல் கூவும்

**2. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றிற்கும் வழங்கப்படும் வேறு பெயர்களை எழுதுக.**

நிலம் ⟶ புவி, பூமி , புவனம், பூலோகம், மேதினி, மண்
நீர் ⟶ புனல், தண்ணீர், அப்பு, வெள்ளம்.
காற்று ⟶ வளி, புயல், கால், வாயு, தென்றல், வங்கூழ்
விசும்பு ⟶ ஆகாயம், மேகம், கார், விண், வானம்.
தீ ⟶ நெருப்பு, தேயு, அக்கினி, அனல், கனல், கங்கு.

**3. ஐம்பூதங்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.**

| | | |
|---|---|---|
|  |  |  |
| நீர் | நெருப்பு | காற்று |

| | |
|---|---|
|  |  |
| ஆகாயம் | நிலம் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in


# மதிப்பீடு

## ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. பறவைகள்__________ பறந்து செல்கின்றன.
   அ) நிலத்தில் ஆ) விசும்பில் இ) மரத்தில் ஈ) நீரில்
   **[விடை : விசும்பில்]**
2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ____________.
   அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு **[விடை : மரபு]**
3. 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) இரண்டு + திணை ஆ) இரு + திணை
   இ) இருவர் + திணை ஈ) இருந்து + திணை
   **[விடை : இரண்டு + திணை]**
4. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால் இ) ஐம்பது + பால் ஈ) ஐ + பால்
   **[விடை : ஐந்து + பால்]**

## ★ குறுவினா ★

1. **உலகம் எவற்றால் ஆனது?**
   உலகம் நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகிய ஐந்தும் கலந்த கலவையால் ஆனதாகும்.
2. **செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?**
   செய்யுளில் மரபுகளை மாற்றினால் செய்யுளின் பொருள் மாறிவிடும்.

## ★ சிந்தனை வினா ★

1. **நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**
   - நம் முன்னோர் தம் வாழ்நாளில் நல்ல முறையில் வாழ்வதற்கான அடிச்சுவட்டினை விட்டுச் சென்றுள்ளார்கள்.
   - நம் முன்னோர்கள் எல்லா உயிர்களுக்கும் உரிய மரபுப் பெயர்களைச் சூட்டிப் பின்பற்றியுள்ளனர்.
   - ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் எனவும் இருதிணை, ஐம்பால்களுக்கென்று உரிய சொற்களைப் பின்பற்றவும் பாகுபடுத்தவும் மரபுகளைப் பின்பற்றியுள்ளனர்.
   - தமிழ்மொழியின் சிறப்பிற்காகவும் வளர்ச்சிக்காகவும் மரபுகளைப் பின்பற்றியிருக்கிறார்கள்.
   - மரபு மாறினால் பொருள் மாறி விடும் பண்பாடும் அர்த்தமற்றுப் போய்விடும்.
   - எனவே தான் நம் முன்னோர் வழிவழியாக மரபுகளைப் பின்பற்றுகின்றனர்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. தொல்காப்பியத்தின் ஆசிரியர் ____________. **[விடை : தொல்காப்பியர்]**
2. தொல்காப்பியம் ___________ அதிகாரங்களைக் கொண்டுள்ளது. **[விடை : 3]**
3. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப்பழமையான இலக்கண நூல் ______________. **[விடை : தொல்காப்பியம்]**
4. திணை ____________ வகைப்படும். **[விடை : இரண்டு]**
5. பால் _____________ வகைப்படும். **[விடை : ஐந்து]**
6. உயிர் எழுத்து நீண்டு ஒலிப்பதை ___________ என்பர். **[விடை : உயிரளபெடை]**

### குறுவினாக்கள்

**1. இருதிணைகள் யாவை?**

- உயர்திணை
- அஃறிணை

---

**2. ஐம்பால்கள் யாவை?**

- ஆண்பால்
- பெண்பால்
- பலர்பால்
- ஒன்றன்பால்
- பலவின்பால்

---

**3. ஐம்பூதங்கள் யாவை?**

- நிலம்
- நீர்
- காற்று
- வானம்
- தீ



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in




உரைநடை உலகம்

# இயல் ஒன்று

# தமிழ் வரிவடிவ வளர்ச்சி

H3W4AC

## மனவரைபடம்




## தெரிந்து தெளிவோம்

தமிழ் மொழியை எழுத இரு வகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளின் அமைப்பு

1. "ஸ" எனும் வடமொழி எழுத்து காணப்படுகிறது
2. மெய்யைக் குறிக்கப் புள்ளி பயன்படுத்தவில்லை
3. எகர,ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை.

## கற்பவை கற்றபின்

**கீழ்க்காணும் பத்தியை படித்து, அதில் இடம்பெற்றுள்ள பழைய வரிவடிவச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றை இன்றைய வரிவடிவில் மாற்றி எழுதுக.**

சுற்றுப்புறச் சூழ்நிலைப் பிரச்சினைகள் பற்றிய இந்தியாவின் கவலை பல்லாண்டு காலமாக வளர்ந்தே வருகிறது.

'மனிதன் ஏழ்மையிலே இருக்கும்போது சத்தற்ற உணவினாலும், நோயினாலும் அச்சுறுத்தப்படுகிறான். பலவீனனாக இருப்பவன் போருக்கு அஞ்சுகிறான்; செல்வந்தனாக இருப்பவனோ தன் கொழுத்த செல்வத்தால் உண்டான அசுத்தத்திற்கு அஞ்சுகிறான்' என்றெல்லாம் திருமதி இந்திராகாந்தி அன்றைக்கு ஆற்றிய உரை நாம் நினைவு கூரத் தக்கது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



| பழைய வரிவடிவம் | இன்றைய வரிவடிவம் |
|---|---|
| சூழ்நிலே | சூழ்நிலை |
| பிரச்சனேகள் | பிரச்சனைகள் |
| கவலே | கவலை |
| உணவிளுலும் | உணவினாலும் |
| நோயிளுலும் | நோயினாலும் |
| அச்சுறுத்தப்படுகிருன் | அச்சுறுத்தப்படுகிறான் |
| பலவீனளுக | பலவீனனாக |
| அஞ்சுகிருன் | அஞ்சுகிறான் |
| செல்வந்தளுக | செல்வந்தனாக |
| இருப்பவளே | இருப்பவனோ |
| நிணேவு | நினைவு |

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற __________ காரணமாக அமைந்தது.
   அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
   **[விடை : அச்சுக்கலை]**
2. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து __________ என அழைக்கப்படுகிறது.
   அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து
   இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து **[விடை : வட்டெழுத்து]**
3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் __________.
   அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ. சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
   **[விடை : தந்தை பெரியார்]**

### ★ கோடிட்ட இடத்தை நிரப்புக ★

1. கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் ________ என அழைக்கப்பட்டன.
   **[விடை : கண்ணெழுத்துகள்]**
2. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் __________.
   **[விடை : வீரமாமுனிவர்]**

### ★ குறுவினாக்கள் ★

**1. ஓவிய எழுத்து என்றால் என்ன?**

தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612359 www.CBSEtips.in



**2. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**

- ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின்,
- ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் ஓசையைக் குறிப்பதாயிற்று. இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையையே ஒலி எழுத்து நிலை என்பர்.

---

**3. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**

- ஓலைகளில் நேர்கோடுகளையும், புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர்.
- ஓலைச் சுவடிகளில் புள்ளி எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

---

**4. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**

- தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் வீரமாமுனிவர்.
- எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை வீரமாமுனிவர் களைந்தார்.
- ‘எ’ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ‘ஏ’ என்னும் எழுத்தை நெடிலாகவும், ‘ஒ’ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ‘ஓ’ என்னும் எழுத்தை நெடிலாகவும் உருவாக்கினார்.

---

## ★ சிறுவினா ★

**1. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

- ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளி பெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
- ஓலைச்சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.
- புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி, மெய்யா உயிர்மெய்யா, குறிலா, நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.
- இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர்.

எனவே, எழுத்துச் சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

---

**2. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

- நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுத்தப்படுகிறது.
- ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இன்று இணைக்கொம்பு (ை) பயன்படுத்தப்படுகிறது.
- ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப் புள்ளிக்குப் பதிலாக இன்று கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின் மேல் புள்ளி இடும் வழக்கம் இன்று வழக்கொழிந்துவிட்டது.

## ★ நெடுவினா ★

**1. எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

**எழுத்துகளின் தோற்றம் :**

**முன்னுரை :**

- மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலை முறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.
- அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

**ஓவிய எழுத்து :**

- தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**ஒலி எழுத்து நிலை :**

- ஒவ்வொரு வடிவமும் அவ்வடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது. அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று.

  இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை 'ஒலி எழுத்து நிலை' என்பர்.

**கண்ணெழுத்து :**

- தமிழகத்தில் கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று அழைக்கப்பட்டன.

**வட்டெழுத்து :**

- வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து வட்டெழுத்து ஆகும்.

**தமிழெழுத்து :**

- இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவமே தமிழெழுத்து ஆகும்.

**முடிவுரை :**

- இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாகக் கருதப்படுகின்றன. அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## ★ சிந்தனை வினாக்கள் ★

**1. தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.**

- ➢ தமிழ்மொழி சார்ந்த பல்வேறு போட்டிகளில் பங்கேற்க வேண்டும்.
- ➢ தமிழ்மொழி வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கச் செய்ய வேண்டும்.
- ➢ கதை, கட்டுரை, கவிதை போன்றவற்றைச் சொந்தமாக எழுத வேண்டும்.
- ➢ அரசு மக்களிடம் தமிழ்மீதான ஆர்வத்தைத் தூண்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ➢ சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களையும், வகுப்பில் சில தலைப்பின்கீழ் கலந்துரையாடச் செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.
- ➢ தமிழ்மொழியில் உள்ள பிறமொழிக் கலப்பினை நீக்கி தனித்துவம் பெறச் செய்ய வேண்டும்.
- ➢ பிறமொழி இலக்கியங்களை மொழிபெயர்த்து தமிழிலேயே வெளியிட்டு, படைக்க வேண்டும்.

---

**2. தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு ஏற்படும் தீங்குகள் குறித்து விவாதிக்கவும்.**

புவனா : வணக்கம் பாலா

பாலா : வணக்கம்.

புவனா : பாலா, நாம் சாதாரணமாக வாழ்க்கை முறையில் தமிழை உரோமன் எழுத்துருவில் எழுதுவதால் தமிழுக்கு தீங்கு ஏற்படுகிறது.

பாலா : ஆமாம் புவனா. தமிழ் மொழியானது பல்வேறு காலச் சூழலில் மாற்றம் பெற்றது. சான்றாக Mutur (மூதூர்), Achchavely (அச்சுவேலி) என்பதை முட்டூர், அச்சுவெளி என்று தவறாகக் கூறப்படும்.

புவனா : இதுமட்டுமல்ல h என்ற ஒரே ஆங்கில எழுத்தால் நகரம், னகரம், ணகரம், ங‌கரம், ஞகரம் என ஐந்தும் எழுதப்படுவதைப் பார்க்கிறோம்.

பாலா : ஆமாம்! ஆனால், ரகர, றகர வேறுபாட்டை ‘r’ என்ற ஒரே எழுத்தால் காட்ட முடியவில்லையே

புவனா : ஆமாம் பாலா! இவ்வாறு தமிழில் உரோமன் எழுத்துருவிலும், உச்சரிப்புகளிலும் வேறுபாடு இருப்பதால்தான் தமிழ்மொழிக்கு தீங்கு ஏற்படுகிறது. எனவே, தமிழை பிறமொழிக் கலப்பு இல்லாமல் வளமடையச் செய்ய வேண்டும்.

பாலா : தமிழ்மொழி வாழ்க, வளர்க.

---

## கூடுதல் வினாக்கள்

## நிரப்புக

1. கல்வெட்டுகளில் காணப்படும் வட எழுத்து __________. **[விடை: ஸ]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



2. ஓலைச் சுவடியில் எழுதும்போது அதிகமாக __________ பயன்படுத்தினர்.
**[விடை : வளைகோடுகளைப்]**
3. தமிழ்மொழி __________ பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாக அமைந்துள்ளது.
**[விடை : கணினி]**
4. மனிதன் தோன்றிய காலத்தில் தன் தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்கு அறிவிக்க பயன்படுத்திய மொழி __________. **[விடை : சைகை மொழி]**
5. மனிதன் தன் எண்ணங்களைக் குறியீடுகளாக பொறித்து வைத்த இடங்கள் __________.
**[விடை : பாறைகள், குகைச் சுவர்கள்]**
6. கண்ணெழுத்துகள் பற்றிக் குறிப்பிடும் இலக்கியம் __________. **[விடை : சிலப்பதிகாரம்]**
7. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் __________.
**[விடை : வீரமாமுனிவர்]**
8. 20-ஆம் நூற்றாண்டில் எழுத்துச் சீர்திருத்தத்தைச் செய்தவர் __________.
**[விடை : பெரியார்]**
9. அரச்சலூர் கல்வெட்டில் எழுதப்பட்டுள்ள எழுத்துகள் __________.
**[விடை : தமிழ், வட்டெழுத்து]**

## குறுவினாக்கள்

**1. மனிதன் எதற்காக எழுத்துகளை உருவாக்கினான்?**

மனிதன் தன் கருத்தை மற்றவருக்குத் தெரிவிக்கவும், மொழியை நிலைபெறச் செய்யவும் எழுத்துகளை உருவாக்கினான்.

**2. எழுத்து வடிவத்தின் தொடக்கநிலை யாது?**

ஆதி மனிதன் குகைகளிலும் பாறைகளிலும் தன் எண்ணங்களை குறியீடுகளாகப் பொறித்து வைத்தனர். இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்கநிலையாகும்.

**3. கண்ணெழுத்து பற்றிக் கூறுக.**

- கடைச்சங்க காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்டு வந்த எழுத்துகள் கண்ணெழுத்துகள் ஆகும்.
- சான்றாக சிலப்பதிகாரம் இலக்கியத்தில் "கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி" என்ற தொடர் காணப்படுகிறது.

## சிறுவினா

**1. எழுத்துகளின் வரிவடிவ வளர்ச்சி பற்றி எழுதுக.**

பண்டைக்காலத்தில் தமிழ் மொழியிலுள்ள எல்லா எழுத்துகளும் நாம் இன்று எழுதுவது போன்ற வடிவத்தில் எழுதப்படவில்லை. அவை காலத்திற்கேற்பப் பல உருவ மாற்றங்களைப் பெற்றுத்தான் இக்கால வடிவத்தை அடைந்திருக்கின்றன. இவ்வாறு எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட **எழுதப்படும் பொருள்களின் தன்மை, அழகுணர்ச்சி** போன்றவை காரணங்களாக அமைகின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



பழங்காலத்தில் **கற்பாறை, செப்பேடு ஓலை** போன்றவற்றில் எழுதினர். அந்தந்தப் பொருள்களின் தன்மைக்கு ஏற்ப எழுத்துகளின் வடிவங்கள் அமைந்தன. பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்கோடுகள் பயன்படுத்தப்பட்டன. ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர். சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது. பின்னர் அவையே நிலையான வடிவங்களாக அமைந்துவிட்டன.

**2. தமிழ்மொழியில் இடம்பெற்ற புள்ளிகளும் எழுத்துகளும் பற்றி எழுதுக.**

எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் தொல்காப்பியர் காலம் முதல் இருந்து வந்துள்ளது. எடுத்துக்காட்டாக **எது** என எழுதப்பட்டால் எது என்றும் எது என எழுதப்பட்டால் ஏது என்றும் ஒலித்தனர்.

அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை நெடிலாகக் கருதப்பட்டன. **(க. = கா, த. = தா).** ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின்முன் இரட்டைப் புள்ளி இட்டனர். **(..க = கை).** எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ஔகார வரிசை எழுத்துகளாகக் கருதப்பட்டன. **(கெ.. = கௌ, தெ.. = தௌ).** மகர எழுத்தைக் குறிப்பிட, பகர எழுத்தின் உள்ளே புள்ளி **(ப்)** இட்டனர். குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in




விரிவானம்

# இயல் ஒன்று

# சொற்பூங்கா

VPCH3V

## மனவரைபடம்




## நூல் வெளி

**செந்தமிழ் அந்தணர்** என்று அழைக்கப்படும் **இரா. இளங்குமரனார்** பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். நூலாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், தொகுப்பாசிரியர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். **இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம்** உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். **தேவநேயம்** என்னும் நூலைத் தொகுத்துள்ளார். திருச்சிக்கு அருகில் அல்லூரில் **திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும்** அமைத்துள்ளார்.

இவரது **தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள்** என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்து இங்குத் தரப்பட்டுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



## தெரிந்து தெளிவோம்

**ஓரெழுத்து ஒரு மொழிகள்**

உயிர் எழுத்து - ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ
மகர வரிசை - மா,மீ,மூ,மே,மை,மோ
தகர வரிசை - தா,தீ,தூ,தே,தை
பகர வரிசை - பா,பூ,பே,பை,போ
நகர வரிசை - நா,நீ,நே,நை,நோ
கசர வரிசை - கா,கூ,கை,கோ
சகர வரிசை - சா,சீ,சே,சோ
வகர வரிசை - வா,வீ,வை,வெள
யகர வரிசை - யா
குறில் எழுத்து - நொ,து

## சொற்பூங்கா - கட்டுரை

**தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகள்:**

மொழி என்பதற்குச் சொல் என்பது ஒரு பொருள். மொழியை (சொல்லை) ஓரெழுத்து மொழி,ஈரெழுத்து மொழி, இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகள் உடைய மொழி என மூன்று வகையாகப் பிரிப்பர்.

ஓர் எழுத்து மொழி என்பதை தொல்காப்பியர் "நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி" என்கிறார். குற்றெழுத்து ஒன்று தனித்து நின்று சொல் ஆவது இல்லை என்பதைக் "குற்றெழுத்து ஐந்தும் மொழி நிறைபு இலவே" என்கிறார் தொல்காப்பியர்.

நன்னூலார் உயிர் வரிசையில் ஆறு எழுத்துகளும், ம வரிசையில் ஆறு எழுத்துகளும், த, ப, ந என்னும் வரிசைகளில் ஐந்து எழுத்துகளும், க, ச, வ என்னும் வரிசைகளில் நான்கு எழுத்துகளும், ய வரிசையில் ஒன்றும் ஆக நாற்பது நெடில்களும் நொ, து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு ஓரெழுத்து ஒரு மொழிகள் வரும் என்கிறார்.

'பூ' என்பது ஓரெழுத்து ஒருமொழி. 'கா' என்பதும் ஓரெழுத்து ஒருமொழி. இவை இரண்டையும் சேர்த்துப் 'பூங்கா' என்ற கலைச்சொல்லை உருவாக்கினார்.

'யா' என்பது வினா. நாம் வினாவுவதற்கு முன் வந்து நிற்கும் எழுத்து 'யா' தான். சான்றாக யாது, யாவர், யாவன், யாவள், யாங்கு, யாண்டு, யார், யாவை என்பனவாகும்.

ஆ, மா, நீ, மீ, பீ, ஊ, சே, தே என்பனவும் ஓரெழுத்து ஒருமொழியாக உள்ளன. போ, வா, நீ, தூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களாக உள்ளன.

மா என்பதும் ஓரெழுத்து ஒருமொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை 'மாநாடும்' என்றும் பல குறு நிலங்களை உள்ளடங்கிய பெருநிலத்தை 'மாநிலம்' என்றும் கூறுகிறோம்.

ஈ என்பது ஈக என்னும் பொருளில் வெளிப்படையாக வருகிறது. ஈ என்பது பொதுப் பெயராக ஓயாது ஒலி செய்யும். சான்றாக மாட்டு 'ஈ', தேன் ஈ என்று பகுத்துக் கூறும் வழக்கம் உள்ளது.

ஏவு என்னும் சொல் 'ஏ' என்றும் 'எய்' என்றும் ஆனது. ஏவுகின்ற அம்பைப்போல கூர்மையான முட்களை உடைய முள்ளம் பன்றியின் பழைமையான பெயர் எய்ப்பன்றி என்று கூறுவர். அம்பை எய்பவர் எய்யினர். அவர்தம் மகளிர் எயினியர் எனவும் கூறுவர்.

இவ்வாறு ஓரெழுத்து ஒருமொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான்; அதன் இனத்தை, பண்பாட்டைக் காப்பான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**ஓரெழுத்து ஒருமொழிகள் இடம்பெறுமாறு ஐந்து தொடர்கள் :**

1. நீ யாருடைய நண்பன்?
2. தை முதல் நாளன்று 'தமிழர் திருநாள்' கொண்டாடப்பட்டு வருகிறது.
3. 'மா' மரத்தில் குரங்குகள் தாவி விளையாடுகின்றன.
4. சுமதி முல்லைப்பூ சூடினாள்.
5. 'ஆ'வின் பால் நம் உடலுக்கு வலிமையைத் தருகின்றது.


இயல் ஒன்று

கற்கண்டு

# எழுத்துகளின் பிறப்பு

6W4SP4

## மனவரைபடம்




## கற்பவை கற்றபின்

**'ஆய்தம்' - இச்சொல்லில் உள்ள ஒவ்வோர் எழுத்தின் வகையையும், அது பிறக்கும் இடத்தையும் பட்டியல் இடுக.**




| எழுத்துகள் | ஆ | ய் | த | ம் |
|---|---|---|---|---|
| வகை | உயிர் எழுத்து | மெய் எழுத்து | உயிர்மெய் எழுத்து | மெய் எழுத்து |
| பிறக்கும் இடம் | கழுத்து | கழுத்து | மார்பு | மூக்கு |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in





## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் ____________.
   அ) இ,ஈ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) அ, ஆ **[விடை : உ, ஊ]**
2. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ____________.
   அ) மார்பு ஆ) கழுத்து இ) தலை ஈ) மூக்கு **[விடை : தலை]**
3. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ____________.
   அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு ஈ) கழுத்து **[விடை : மார்பு]**
4. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவால் பிறக்கும் எழுத்துகள் __________.
   அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம் **[விடை : ட், ண்]**
5. கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ____________.
   அ) ம் ஆ) ப் இ) ய் ஈ) வ் **[விடை : வ்]**

### ★ பொருத்துக ★

அ) க், ங் - 1) நாவின் இடை, அண்ணத்தின் இடை
ஆ) ச், ஞ் - 2) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி
இ) ட், ண் - 3) நாவின் முதல், அண்ணத்தின் அடி
ஈ) த், ந் - 4) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி **[விடை : அ - 3, ஆ - 1, இ - 4,ஈ - 2]**

### ★ சிறுவினாக்கள் ★

**1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**

உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறு வேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**2. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

- வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**3. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.**

- ழகரம் - மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றது.
- லகரம் - மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ளகரம் - மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. உயிர் எழுத்துகள் பிறக்கும் இடம் ______________. **[விடை : கழுத்து]**
2. தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்து ____________. **[விடை : ஆய்தம் (ஃ)]**
3. வாய் திறத்தலின் முயற்சியால் பிறக்கும் எழுத்துகள் _________. **[விடை : அ, ஆ]**
4. மேல் கீழ் இதழ்கள் ஒட்டுவதால் பிறக்கும் எழுத்துகள் ________. **[விடை : ப், ம்]**

## மொழியை ஆள்வோம்

### கேட்க

**தமிழ்மொழியை வாழ்த்திப் பாடிய வேறு கவிஞர்களின் பாடல்களைக் கேட்டு மகிழ்க.**

அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!
முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!
கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்
மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!
தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!

**- பாவலரேறு பெருஞ்சித்திரனார்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக

**தமிழ் எழுத்துகளின் தோற்றமும் வளர்ச்சியும்**

அனைவருக்கும் என் இனிய வணக்கம். மனிதர்கள் முதன் முதலில் தன் தேவைகளையும் எண்ணங்களையும் பிறருக்குத் தெரிவிக்கச் சைகைகளைப் பயன்படுத்தி வந்தார்கள். பின் ஒலிகளை எழுப்பியும் சொற்களைக் கற்றுக்கொண்டனர். தமிழ் எழுத்துகளின் பிறப்பிடமாக குமரிக்கண்டமே அமைந்திருந்தன.

மக்கள் தொடக்க காலத்தில் தம் எண்ணங்களைக் குறியீடுகளாக குகைச் சுவர்களிலும், பாறைகளிலும் பொறித்து வைத்தனர். இவ்வரிவடிவத்தை ஓவிய எழுத்து என்று கூறுவர்.

இன்றைய அச்சுக்கலை தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போது உள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

செப்பேடுகள், கல்வெட்டுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களே வட்டெழுத்துகள் ஆகும். தமிழ் எழுத்துகளில் வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைமையான எழுத்து வட்டெழுத்தாகும். கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் கண்ணெழுத்துகள் என்று கூறப்பட்டன.

தந்தை பெரியாரும், வீரமாமுனிவரும் தமிழில் உள்ள சில எழுத்துகளைச் சீர்திருத்தம் செய்தனர். வளர்ந்துள்ள நம் தமிழ் எழுத்துகள் தற்போது கணினிப் பயன்பாட்டிற்கு ஏற்ற மொழியாகத் திகழ்கிறது.

காலந்தோறும் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ச்சி அடைந்து வரும் நம் தாய் மொழியாகிய தமிழை நாம் நன்கு பிழையின்றிப் பேசுவதோடு அல்லாமல் வளர்ச்சி அடையவும், மேம்பாடு அடையவும் தொடந்து செயல்படுவோம் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். நன்றி!

## அகரவரிசைப்படுத்துக

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம்நீ,ஈசன், ஐயம்.

அழகுணர்ச்சி, ஆரம் நீ, இரண்டல்ல,ஈசன், உரைநடை, ஊழி, எழுத்து, ஏழ்கடல், ஐயம், ஒலிவடிவம், ஓலைச்சுவடிகள், ஔகாரம்.

## அறிந்து பயன்படுத்துவோம்

**மரபுத் தொடர்கள்**

தமிழ் மொழிக்கெனச் சில சொல் மரபுகள் உள்ளன. அவை பழங்காலம் முதலே பின்பற்றப்படுகின்றன.

**பறவைகளின் ஒலிமரபு**

| | | |
|---|---|---|
| ஆந்தை அலறும் | குயில் கூவும் | மயில் அகவும் |
| காகம் கரையும் | கோழி கொக்கரிக்கும் | கிளி பேசும் |
| சேவல் கூவும் | புறா குனுகும் | கூகை குழறும் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



**தொகை மரபு**

| | | |
|---|---|---|
| மக்கள் கூட்டம் | ஆநிரை | ஆட்டு மந்தை |

**வினைமரபு**

| | | |
|---|---|---|
| சோறு உண் | தண்ணீர் குடி | பூக் கொய் |
| முறுக்குத் தின் | பால் பருகு | இலை பறி |
| சுவர் எழுப்பு | கூடை முடை | பானை வனை |

## சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. கோழி **கொக்கரிக்கும்** (கூவும் / கொக்கரிக்கும்)
2. பால் **பருகு** (குடி / பருகு)
3. சோறு **உண்** (தின் / உண்)
4. பூ **கொய்** (கொய் / பறி)
5. ஆ **நிரை** (நிரை / மந்தை)

## மரபுப் பிழையை நீக்கி எழுதுக

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

**விடை :**

சேவல் **கூவும்**சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூக் **கொய்ய**நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் **கூவிக்**கொண்டிருந்தது. பூவைக் **கொய்ததுடன்**, தோரணம் கட்ட மாவிலையையும் **பறித்துக்** கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைப் **பருகி** விட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டாள்.

## கட்டுரை எழுதுக

**நான் விரும்பும் கவிஞர்**

**குறிப்புச் சட்டகம் :**

1. முன்னுரை
2. பிறப்பு
3. விளையும் பயிர்
4. சமுதாயத் தொண்டு
5. மொழிப்பற்று
6. விடுதலை வேட்கை
7. முடிவுரை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**முன்னுரை :**

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு" என்று முழங்கி, தனக்கென தனி முத்திரை பதித்த கவிஞர் பாரதியாரே நான் விரும்பும் கவிஞர். இவரைப் பற்றி பின்வருமாறு காணலாம்.

**பிறப்பு :**

தூத்துக்குடி மாவட்டம் எட்டையபுரத்தில் சின்னச்சாமி, இலக்குமி அம்மையார் இணையருக்கு 11.12.1882 இல் பாரதியார் பிறந்தார்.

**விளையும் பயிர் :**

'விளையும் பெயர் முளையிலேயே தெரியும்' என்பதற்கேற்ப இளம் வயதிலேயே கவி பாடும் திறமை பெற்றிருந்தார். ஆகையால்,'பாரதி' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார்.

**சமுதாயத் தொண்டு :**

'வேதியராயினும் ஒன்றே - அன்றி

வேறு குலத்தினராயினும் ஒன்றே! என வீர முழக்கமிடுகின்றார். தனியொருவனுக்கு உணவில்லையெனில், சகத்தினை அழித்திடுவோம், 'ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில்!' மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்! ஆகிய வரிகள் பாரதியின் சமுதாயத் தொண்டினை வெளிப்படுத்தும் வீர வரிகள் ஆகும்.

**மொழிப்பற்று :**

மொழியைத் தம் விழியாகக் கருதி நம் அன்னைத் தமிழுக்கு அணிகளைப் பூட்டி மகிழ்ந்தார். வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர், எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே எனப் பாடி மகிழ்ந்தார். சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா எனவும் யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் எனவும் முழங்கினார்.

**விடுதலை வேட்கை :**

பாரதநாடு விடுதலை பெறவேண்டும் என்பதே பாரதியின் உயிர்வேட்கை ஆகும். 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே - ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோமென்று!' பாடினார். 'என்று தணியும் இந்தச் சுதந்தர தாகம்!' என ஏங்கினார்.

**முடிவுரை :**

பாரதநாடு பாருக்கெலாம் திலகம் எனப் பாடிய பைந்தமிழ்ப் பாவலன் 11.09.1921 அன்று மண்ணுலகை விட்டு விண்ணுலகினை அடைந்தார். இவரைப் போலவே நாமும் மொழி, நாடு, சமுதாயப் பற்றுடன் வாழ்வோம். பெற்ற விடுதலையைப் பேணிக் காப்பதுவே நம் கடமையாகும். அவர் வழியில் நாமும் நடந்து, நாடும் வீடும் போற்ற வாழ்ந்து தாய்நாட்டின் பெருமையைக் காத்திடுவோம்!



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## மொழியோடு விளையாடு

### பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக

கல், பூ, மரம், புல், வாழ்த்து, சொல், மாதம், கிழமை,ஈ, பசு, படம், பல், கடல், கை, பக்கம், பா.

| கள் | க்கள் | ங்கள் | ற்கள் |
|---|---|---|---|
| வாழ்த்துகள் | பூக்கள் | மரங்கள் | கற்கள் |
| கிழமைகள் | ஈக்கள் | மாதங்கள் | புற்கள் |
| கடல்கள் | பசுக்கள் | படங்கள் | சொற்கள் |
| கைகள் | பாக்கள் | பக்கங்கள் | பற்கள் |

### ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக

(எ.கா) அணி - பல அணிகளை அணிந்த வீரர்கள், அணி அணியாய்ச் சென்றனர்.

படி - என் ஆசிரியர் புத்தகத்தைப் படிக்கும் போது புரியும்படி படிக்கச் சொன்னார். நான் உடனே மாடிப் படியில் அமர்ந்து அமைதியாகப் படித்தேன்.

திங்கள் - மார்கழித் திங்களன்று வரும் முழுத்திங்கள் திங்கட்கிழமையாக அமைந்தால் அது சிறப்புடையதாகும்.

ஆறு - நான் காலை ஆறு மணிக்கு எழுந்து, அருகில் உள்ள காவிரி ஆறு கரைபுரண்டு ஓடுவதில் நீராடி வீட்டிற்குச் சென்றார்.

### சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக

1. வட்டெழுத்து எனப்படும் தமிழ் கோடுகளால் வளைந்த அமைந்த எழுத்து.
   **விடை :** வளைந்த கோடுகளால் அமைந்த தமிழ் எழுத்து வட்டெழுத்து எனப்படும்.
2. உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்.
   **விடை :** உலகம் உள்ள வரையிலும் தமிழ்மொழி வாழட்டும்.
3. வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.
   **விடை :** பகைவரை வென்றதைப் பாடும் இலக்கியம் பரணி ஆகும்.
4. கழுத்து பிறக்கும் இடம் உயிரெழுத்து ஆகும்.
   **விடை :** உயிரெழுத்து பிறக்கும் இடம் கழுத்து ஆகும்.
5. ஏகலை கலையை அம்புவிடும் தமிழ் என்றது.
   **விடை :** தமிழ், அம்பு விடும் கலையை ஏகலை என்றது.

### நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள்...**

1. எழுத்துகளைச் சரியான வரிவடிவத்தில் எழுதுவேன்.
2. அறிவிப்புப் பலகைகளில் உள்ள பிழைகளை உரியவரிடம் கூறித் திருத்தச்செய்வேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## இணையத்தில் காண்க

**தமிழ் வரிவடிவ எழுத்துகளில் காலந்தோறும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இணையத்தில் தேடித் தொகுத்து வருக.**

**உருவெழுத்து:**

பழந்தமிழகத்தில் உருவஎழுத்து உணர்வு எழுத்து, ஒலியெழுத்து, தன்மை எழுத்து எனவரும் எழுத்துகள் ஒவ்வொன்றும் இருபாற்பட்டு எட்டு வகையாக விளங்கிய பாங்கும் அதில் உருவ எழுத்து ஓவியன் கைவினைத் திறன் போன்றது என்பதும் பெறப்படும். இதனால் குழுக்களாக இருந்த பழங்குடி மக்கள் பலவகைப்பட்ட எழுத்துருக்களைப் பயன்படுத்திய பாங்கும் புலப்படும்.

**ஒலியெழுத்து:**

ஒலியெழுத்து என்று கூறி எழுத்திற்கு ஒலி வடிவம் வரிவடிவம் இரண்டும் உண்டு என்பதையும் அது இசையெழுப்பும் பறவைகளின் ஒலிபோல செவிப் புலனைச் சென்று அடையும் என்றும் விளக்கக் காண்க. பறவைகள் பேசுவது போல மனிதன் இசையால் பேசிய பாங்கு புலப்படக் காண்க.

**தொல்காப்பியம் கூறும் எழுத்து வடிவங்கள்:**

தொல்காப்பியத்தின் காலத்தை கி.மு 15,000 முதல் கி.மு 7 ஆம் நூற்றாண்டு வரை ஆய்வறிஞர்கள் கணித்துக் கூறுவர். முனைவர் இலக்குவனார் தமது முனைவர்பட்ட ஆய்வேட்டில் தொல்காப்பியம் கி.மு 700க்கு முற்பட்டது என்பதைச் சான்றுகளுடன் நிறுவியுள்ளார். அவ்வளவு பழமையான தொல்காப்பியம் தமக்கு முன்னரே தமிழின் ஒலி, வரி, வடிவங்கள் செப்பம் உடையவனவாக இருந்தமையைக் கூறும்.

**தமிழி எழுத்து:**

சங்ககாலக் கல்வெட்டுக்களில் காணும் எழுத்துக்களை தமிழி என்பர்(சிலர் தமிழ் பிராமி ___ திராவிடி என்றும் குறிப்பர்). தமிழுக்கே உரிய வடிவத்தை தமிழி என்று கூறுவது தான் சரி. இன்றுள்ள பழமையான எழுத்து வடிவம் தமிழியே என்பதும் அதுகாலந்தோறும் மாற்றம் பெற்றதையும் அறிஞர்கள் பட்டியல் இட்டுக் காட்டியுள்ளனர். இன்றுள்ள வடிவங்களுக்கு வித்தாக உள்ளது தமிழியே.

**கோல் எழுத்து :**

ஓவிய எழுத்தில் இருந்து கல்லில் பொறிக்கக் கோடுகளாக வரைந்த குறியீடுகளைக் கோல் எழுத்து என்றும் குறிப்பர்.

**வட்டெழுத்து:**

கல்லில் வெட்டப்பட்ட எழுத்துக்களே வட்டெழுத்து எனப்பட்டது என்றும் ஓலைகளில் எழுதும்போது கோடுகள் ஓலைகளைக் கிழிக்கும் என்பதால் வட்டமாக எழுதியதால் இப்பெயர் பெற்றது என்றும் கூறுவர். பாண்டிய நாட்டில் வட்டெழுத்துக்கள் கி.பி.எட்டாம் நூற்றாண்டு வரை வழக்கில் இருந்ததைக் கல்வெட்டுக்கள் காட்டும். இமயமலை அடிவாரத்தில் உள்ள கோபலேசுவரர் ஆலயத்தில் வட்டெழுத்துக் கல்வெட்டு (தமிழில்) உள்ளது. இவ்வாறு தமிழ் வட்டெழுத்து இந்தியா முழுவதும் பரவிப் பல்வேறு எழுத்து வடிவங்கள் தோன்றக் காரணமான தன்மையும் அறியப்படும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**கிரந்த எழுத்து:**

தமிழகத்தில் பல்லவர் ஆட்சி ஏற்பட்டதும் வடமொழி ஆதிக்க மொழியாயிற்று. கிரந்த எழுத்துக்கள் வழக்கில் வந்தன. இதனைப் பல்லவ கிரந்தம் என்றே அழைப்பர். கிரந்தம் என்ற சொல்லிற்கு நூல் என்பது பொருள். இதுவே பின்னர் எழுத்தையும் குறித்தது. தமிழ்க் கல்வெட்டுக்களில் வடமொழிப் பகுதியைக் குறிக்க இந்த எழுத்துக்களையே பயன்படுத்தினர். தமிழ்நாட்டில் ஆனைமலை, அழகர்மலை, திருமயம், குடுமியாமலை, தகடூர், பேரூர் போன்ற இடங்களில் உள்ள சோழர்காலக் கல்வெட்டுக்களில் இக்கிரந்த எழுத்துக்களைக் காணலாம்.

**முதல் அச்சு எழுத்து:**

தமிழ்மொழியின் முதல் அச்சுப் புத்தகம் தம்பிரான் வணக்கம் என்னும் நூல் 1578 அக்டோபர் 20-ஆம் நாள் கொல்லத்தில் அச்சிடப்பட்டது. அதில் கொல்லம் எழுத்து, மலபார் எழுத்து, கோவா எழுத்து என்பன போன்ற வேறு வேறு வகையான தமிழ் எழுத்துக்கள் அன்று வழக்கில் இருந்ததைக் குறிக்கக் காணலாம். இவ்வாறு அச்சில்கூடப் பலவகைப்பட்ட எழுத்துகள் பழக்கத்தில் இருந்ததை நாம் அறிய முடியும்.

**வீரமாமுனிவர் செய்த மாற்றம்:**

"எகரத்துக்கும், ஒகரத்துக்கும் உட்புள்ளியை நிக்கிக் கால் இட்டார். உயிர்மெய்களில் எகர ஒகரங்கட்கு ஒற்றைக் கொம்பு அமைத்தார். அவரே சதுர வடிவான எழுத்துக்களை அமைத்தார் என்றும் கூறுவர்.

**பெரியார் செய்த சீர்திருத்தம்:**

பகுத்தறிவுப் பகலவன், ஈரோட்டுப் பெரியார் தமிழ் எழுத்துக்கள் சீர்மை பெற வேண்டும் என்று கருதினார். அதன் விளைவாக உயிர்மெய்க்கு, மெய்யுடன் கால் சேர்த்து வழங்கும் முறையைக் கொண்டார்.

## இயல் 1

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 40**

**I. நிரப்புக.** **5 x 1 = 5**

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் ____________.
2. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ____________.
4. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ____________.
5. மொழி என்பதற்குச் ____________ என்பதும் ஒரு பொருள்.

**II. பொருத்துக :** **4 x 1 = 4**

6. இசை - அ) உயிர் எழுத்து
7. விசும்பு - ஆ) தழுவுதல்
8. கழுத்து - இ) புகழ்
9. தழாஅல் - ஈ) வானம்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**III. அடிபிறழாமல் எழுதுக:** **1 x 5 = 5**

10. வாழ்க நிரந்தரம் ....... எனத் தொடங்கும் பாடல்.

**IV. குறுவினா:** **3 x 2 = 6**

11. உலகம் எவற்றால் ஆனது?
12. ஓவிய எழுத்து என்றால் என்ன?
13. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

**V. சிறுவினா:** **2 x 4 = 8**

14. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
15. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகளை எழுதுக.

**VI. நெடுவினா :** **1 x 7 = 7**

16. தமிழில் ஓரெழுத்து ஒருமொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளை எழுதுக.

**VII. மொழிப்பயிற்சி :** **5 x 1 = 5**

17. **கலைச் சொல் கூறுக :** Phoneme.
18. **மரபுப் பிழை நீக்கி எழுதுக :** குயில் குனுகும், புறா கூவும்.
19. **மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக :** பூ ____________ (கொய் / பறி)
20. **பொருத்தமான பன்மை விகுதியைச் சேர்த்தெழுதுக :** வாழ்த்து ________ (கள் / க்கள்)
21. **சொற்களை ஒழுங்குபடுத்தி முறையான தொடராக்குக :**
    வென்றதை பரணி பகைவரை ஆகும் பாடும் இலக்கியம்.

---

## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 40**

**I. நிரப்புக.** **5 x 1 = 5**

1. 'சிந்துக்குத் தந்தை' என்று அழைக்கப்படுபவர் ________________.
2. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________________.
3. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ________________.
4. கீழ் இதழும் மேல் வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து ________________.
5. ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ________________ என்பர்.

**II. பொருத்துக :** **4 x 1 = 4**

6. வல்லினம் - அ) கழுத்து
7. மெல்லினம் - ஆ) தலை
8. இடையினம் - இ) மார்பு
9. ஆய்தம் - ஈ) மூக்கு

**III. குறுவினாக்கள் :** **5 x 2 = 10**

10. ப், ம் - ஆகிய இரு எழுத்துகள் எவ்வாறு பிறக்கின்றன?
11. ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?
12. வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம் இரண்டினைக் கூறுக.
13. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



14. தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?

**IV. சிறுவினாக்கள் :** **2 x 4 = 8**

15. எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.
16. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.

**V. நெடுவினா :** **1 x 8 = 8**

17. நான் விரும்பும் கவிஞர் - கட்டுரை எழுதுக.

**VI. மொழிப்பயிற்சி :** **5 x 1 = 5**

18. **சரியான மரபுச் சொல்லை தேர்ந்தெடு :** பால் ____________ (குடி / பருகு)
19. **மரபுப் பிழையை நீக்கி எழுதுக :** மயில் அலற ஆந்தை அகவும்.
20. **பொருத்தமான பன்மை விகுதியை சேர்த்து எழுதுக :** பல் __________ (கள் / ற்கள்)
21. **கலைச்சொல்லை எழுதுக :** Epigraph.
22. **சொற்களை ஒழுங்குப்படுத்தி முறையான தொடராக்குக.**
    உலகம் தமிழ்மொழி வாழட்டும் உள்ளவரையிலும்




Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in


இயல் இரண்டு

# ஈடில்லா இயற்கை



**கற்றல் நோக்கங்கள்**

- பாடலை ஓசை நயத்துடன் படித்துச் சுவைத்தல்.
- நாட்டுப்புறப் பாடல்கள் வழி மக்களின் உணர்வுகளை அறிதல்.
- பழங்குடியினர் இயற்கையைப் போற்றும் உணர்வை அறிந்து பின்பற்றுதல்.
- மொழிபெயர்ப்புப் படைப்புகளின் மூலம் நல் உணர்வுகளை உணர்ந்து மதித்தல்.
- வினைமுற்றுச் சொற்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



இயல் இரண்டு

கவிதைப்பேழை

# ஓடை

SANEVK

**மனவரைபடம்**

- ஓடை
  - ஓடை அழகு → சலசல ஒலி
  - உழைப்பு → கொடை
  - வள்ளைப்பாட்டு → முழவு ஒலி
  - உணவு → வறுமை போக்கல்
  - புற்களுக்கு இன்பம்
  - நீர்வளம்
  - பயிர் செழித்தல்

**பாடல்**



*ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! - கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
(ஓடை ஆட ...)

பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!
ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி!
(ஓடை ஆட ...)

நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி
(ஓடை ஆட ...)

நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு மைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்*
(ஓடை ஆட ...)

\- வாணிதாசன்

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| தூண்டுதல் | - | ஆர்வம் கொள்ளுதல் |
| ஈரம் | - | இரக்கம் |
| முழவு | - | இசைக்கருவி |
| பயிலுதல் | - | படித்தல் |
| நாணம் | - | வெட்கம் |
| செஞ்சொல் | - | திருந்திய சொல் |
| நன்செய் | - | நிறைந்த நீர்வளத்தோடு பயிர்கள் விளையும் நிலம் |
| புன்செய் | - | குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம் |
| வள்ளைப்பாட்டு | - | நெல்குத்தும்போது பாடப்படும் பாடல் |

## பாடலின் பொருள்

நீரோடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! கற்களில் உருண்டும் தவழ்ந்தும் நெளிந்தும் செல்லும் ஓடையில் நீந்தி விளையாட மனம் ஆர்வம் கொள்கிறதே! **சலசல** என்று ஒலி எழுப்பியபடி ஓடுவதற்கு இந்த ஓடை எந்தப் பள்ளியில் படித்ததோ? நூல்களால் வருணித்துச் சொல்ல முடியாத இதன் அழகுக்கு இணையாக யாரால் எழுத முடியும்?

நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது. அவ்வாறு விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது. கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதுகிறது. குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது. நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது. சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல் ஒலி எழுப்புகிறது.

## நூல் வெளி

தமிழகத்தின் **வேர்ட்ஸ்வொர்த்** என்று புகழப்படுபவர் கவிஞர் வாணிதாசன். **அரங்கசாமி என்கிற எத்திராசலு** என்பது இவரின் இயற்பெயர் ஆகும். இவர் பாரதிதாசனின் மாணவர். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் வல்லவர். **கவிஞரேறு, பாவலர்மணி** முதலிய சிறப்புப்பெயர்களைப் பெற்றவர். இவருக்குப் பிரெஞ்சு அரசு **செவாலியர்** விருது வழங்கியுள்ளது. **தமிழச்சி, கொடிமுல்லை, தொடுவானம், எழிலோவியம், குழந்தை இலக்கியம்** என்பன இவரது நூல்களுள் சிலவாகும்.

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள **ஓடை** என்னும் பாடல் இவரது **தொடுவானம்** என்னும் நூலில் உள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்



மலை, அருவி, ஓடை, மரங்கள், வயல்கள் ஆகியன இடம்பெறுமாறு ஓர் இயற்கைக் காட்சியை வரைந்து வண்ணம் தீட்டி மகிழ்க.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. பள்ளிக்குச் சென்று கல்வி ______________ சிறப்பு.
அ) பயிலுதல் ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்
**[விடை: பயிலுதல்]**

2. செஞ்சொல் மாதரின் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ____________.
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு **[விடை: ஓடை]**

3. 'நன்செய்' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____________.
அ) நன் + செய் ஆ) நன்று + செய் இ) நன்மை + செய் ஈ) நல் + செய்
**[விடை : நன்மை + செய்]**

4. 'நீளுழைப்பு' - என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____________.
அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு
இ) நீள் + அழைப்பு ஈ) நீள் + உழைப்பு **[விடை : நீள் + உழைப்பு]**

5. சீருக்கு + ஏற்ப - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____________.
அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப
**[விடை : சீருக்கேற்ப]**

6. ஓடை + ஆட - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________.
அ) ஓடைஆட ஆ) ஓடையாட இ) ஓடையோட ஈ)ஓடைவாட
**[விடை : ஓடையாட]**

### ★ குறுவினா ★

**1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?**

ஓடை கற்களில் உருண்டும், தவழ்ந்தும், நெளிந்தும், சலசல என ஒலி எழுப்பியும், கரையை மோதி ஓடுகிறது என வாணிதாசன் கூறுகிறார்.

**2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?**

பெண்கள் பாடும் வள்ளைப்பாட்டின் சிறப்புக்கேற்ப முழவை முழக்குவது போல ஓடை எழுப்பும் ஒலி அமைந்துள்ளதாக குறிப்பிடுகிறார் வாணிதாசன்.

### ★ சிறுவினா ★

**1. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?**

- நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



- விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப் போக்குகிறது.
- குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது.
- உள்ளத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு அயராது ஒடித் தன் உழைப்பினைக் கொடையாகத் தருகிறது.

## ★ சிந்தனை வினா ★

**வள்ளைப்பாட்டு என்பது நெல்குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இதுபோல் வேறு எந்தெந்தச் சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?**

தாலாட்டுப் பாடல் : பிறந்த குழந்தைக்குப் பாடும் பாடல்.
நடவுப் பாடல் : நாற்று நடவு செய்யும்போது பெண்களால் பாடப்படும் பாடல்.
ஏற்றப் பாடல் : வயலுக்கு கிணற்றிலிருந்து நீர் இறைக்கும்போது பாடப்படும் பாடல்.
களைப் பாடல் : களைப்பு தெரியாமல் இருக்க களை பறிக்கும் போது பெண்கள் பாடும் பாடல்.
ஒப்பாரிப் பாடல் : இறந்தவரின் புகழைச் சொல்லிப் பாடப்படும் பாடல்.
குறத்திப் பாடல் : குறவர் பாடும் பாடல்.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. மனிதர் வாழ்வு ______________ யோடு இயைந்தது. **[விடை : இயற்கை]**
2. பாவலர் மணி என்று அழைக்கப்படுவர் ______________. **[விடை : வாணிதாசன்]**
3. குறைந்த நீரால் பயிர்கள் விளையும் நிலம் ______________. **[விடை : புன்செய்]**
4. கொடிமுல்லை - என்னும் நூலை எழுதியவர் ___________. **[விடை : வாணிதாசன்]**
5. கவிஞர் வாணிதாசனின் இயற்பெயர்_________. **[விடை : அரங்கசாமி என்ற எத்திராசலு]**
6. நாணம் என்ற சொல்லின் பொருள் _______________. **[விடை : வெட்கம்]**
7. தமிழகத்தின் வேர்ட்ஸ்வொர்த் என்று புகழப்படுபவர் _________. **[விடை : வாணிதாசன்]**

### குறுவினா

**1. வாணிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?**

- தமிழச்சி
- கொடி முல்லை
- தொடுவானம்
- எழிலோவியம்
- குழந்தை இலக்கியம்.

**2. வாணிதாசன் அறிந்த மொழிகள் யாவை?**

தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



இயல் இரண்டு

கவிதைப்பேழை

# கோணக்காத்துப் பாட்டு

KWU5HB

## மனவரைபடம்

புயல்காற்று
- வீட்டின் கூரைகள் சாய்ந்தன
- வாங்கல் - தென்னம் பிள்ளைகள்
- காங்கேயம் - பருத்திச் செடிகள்
- மாடி வீடுகள் விழுந்தன.
- ஆடவர் தம் மனைவி, பிள்ளைகள்
- தொண்டை நாட்டு மரங்கள் ஒடிந்து
- கப்பல்கள் கவிழ்ந்தன.
- ஆடு மாடுகள் இறந்தன.

## பாடல்

உருமங்கட் டியமுகிலால் - கோணக்காத்து
உழன்று உழன்றுமெத்த அடித்ததினால்
பெரிதான வீடுகளெல்லாம் - கோப்புடனே
பிரிந்தும் கூரைத்தட்டுச் சரிந்ததங்கே

சிங்காரமாய் வாங்கல்நகரில் - வைத்திருந்த
தென்னம்பிள்ளை அத்தனையும்
வின்னமாச்சுதே
மங்காத காங்கயநாட்டில் - மேட்டுக்காட்டில்
மாளாத பருத்திஎல்லாம்
கோலாகப்போச்சுதே

ஆரங்கள்வைத்த சுவரெல்லாம் - மெத்தைவீடு
அடியோடே விழுந்ததங்கே கெடிகலங்கித்
தாரங்களும் பிள்ளைகளுடன் - கூட்டிக்கொண்டு
தானடந்து வேகமுடன் கூகூவென்றார்

வாகுடனே தொண்டைமான்சீமை - தன்னிலே
வளர்ந்தோங்கும் மாநகரம் தன்னிலேதானே
சேகரமாய் வைத்தமரங்கள் - அத்தனையும்
சின்னபின்ன மாய்ஒடிந்து பின்னமாச்சுதே

சம்பிரமுடன் கப்பல்களெல்லாம் - கடலிலே
தானடந்து வேகமுடன் வரும்போதிலே
கொம்புசுத்திக் கோணக்காத்து - காலனைப்போல்
கோணமழை வந்துகப்பல் தான்கவிழ்ந்ததே



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



ஆர்க்காடு மைசூர்வரைக்கும் - கோணக்காத்து
அலறி அலறிமெத்த அடித்ததனால்
மார்க்கமான சாலையில்போன - சனங்களெல்லாம்
மயங்கி மயங்கிமெத்தத் தவித்தார்களே

தெத்துக்காடு காளப்பநாயக்கன் - பட்டியிலே
செத்திறந்த ஆடுமாடு மெத்தவுண்டாம்
சித்தர்கள் பொருந்திவாழும் - கொல்லிமலை
சேர்ந்திருந்த நாடெல்லாம் காத்தடிச்சுதே

இப்படிக்கிச் சேதங்களானால் - குமரேசா
எப்படிப் பிழைத்துநாங்கள் ஒப்பிதமாவோம்
மெய்ப்புடன்வே லாயுதங்கொண்டு - வருகின்ற
விக்கினமெல் லாம்தீர்த்துக் காத்திடீரையா

- வெங்கம்பூர் சாமிநாதன்



## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| முகில் | - | மேகம் |
| கெடிகலங்கி | - | மிக வருந்தி |
| சம்பிரமுடன் | - | முறையாக |
| சேகரம் | - | கூட்டம் |
| வின்னம் | - | சேதம் |
| வாகு | - | சரியாக |
| காலன் | - | எமன் |
| மெத்த | - | மிகவும் |
| காங்கேய நாடு | - | கொங்குமண்டலத்தின் 24 நாடுகளுள் ஒன்று. |

## பாடலின் பொருள்

திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன. வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின. அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.

அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன. ஆடவர் தம் மனைவி, பிள்ளைகளுடன் ‘கூகூ’ என்று அலறியபடி ஓடினர். தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன. கடலில் விரைந்து வந்த கப்பல், எமனைப் போல வந்த பெருமழையினாலும் சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர். தெத்துக்காடு, காளப்பநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் ஏராளமான ஆடு மாடுகள் இறந்தன. சித்தர்கள் வாழும் கொல்லி மலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

முருகப் பெருமானே! இத்தகைய அழிவுகளை நாங்கள் எவ்வாறு தாங்குவோம்? எங்களுக்கு வருகின்ற இடர்களை எல்லாம் தடுத்து எங்களைக் காப்பாயாக!

## நூல் வெளி

நாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்ட காலங்களில், மக்கள் பட்ட துயரங்களை அக்காலத்தில் வாழ்ந்த புலவர்கள் **கும்மிப் பாடல்களாகப் பாடினர்.** பேச்சுத் தமிழில் அமைந்த இவை பஞ்சக்கும்மிகள் என்ற அழைக்கப்பட்டன. **புலவர் செ. இராசு** தொகுத்த **பஞ்சக்கும்மிகள்** என்னும் நூலில் இடம்பெற்றுள்ள **வெங்கம்பூர் சாமிநாதன்** இயற்றிய **கோணக்காத்துப் பாட்டு** என்னும் **காத்து நொண்டிச் சிந்திலிருந்து** சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

**1. மக்களைப் பாதிக்கும் இயற்கைச் சீற்றங்களைப் பற்றி எழுதுக.**

- நீரின் மூலம் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் கனமழையாலும், கடல்சீற்றத்தாலும் பெருமளவு நீர் இடம் பெயர்க்கப்படும் நிலையே சுனாமி என்று கூறுவர்.
- நிலத்தின் மூலம் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் நிலநடுக்கத்தால் கட்டிடம் இடுபடுதல், எரிமலை வெடித்தல், சுனாமி ஏற்படுதல். இது மக்களுக்கு பேரழிவினை ஏற்படுத்துகிறது.
- காற்றின் மூலம் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் சூறாவளி மற்றும் புயல் காற்றினால் பொருட் சேதமும் உயிர்ச்சேதமும் ஏற்பட்டு மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.
- நெருப்பினால் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் அதிக வெப்பத்தால் வெப்பக்காற்று வீசி காட்டுத்தீயாக பரவிக்கொண்டே இருக்கும். இவற்றால் பல உயிர்கள் எரிந்து சாம்பாலாகிவிடும். சான்றாக தேனி மாவட்டம் குரங்கனி காட்டுத்தீ பாதிப்பினைக் கூறலாம்.
- ஆகாயத்தின் மூலம் ஏற்படும் இயற்கைச் சீற்றங்கள் கோடைக்காலங்களில் ஏற்படும் இடி, மின்னல் மிகவும் ஆபத்தானது. இவைகளினால் மக்களுக்கு மிகவும் பாதிப்பினை ஏற்படுத்துகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in



**2. இயற்கைச் சீற்றங்கள் பற்றிய புகைப்படங்களை நாளேடுகளிலிருந்து திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.**



## மதிப்பீடு

**★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★**

1. வானில் கரு ____________ தோன்றினால் மழை பொழியும் என்பர்.
அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல் **[விடை : முகில்]**

2. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ____________ யும் ஓட்டிவிடும்.
அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை
**[விடை : காலனை]**

3. ‘விழுந்ததங்கே’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே
இ) விழுந்தது + அங்கே ஈ) விழுந்தது + ஆங்கே
**[விடை : விழுந்தது + அங்கே]**

4. ‘செத்திறந்த’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த இ) செ + இறந்த ஈ) செத்து + இறந்த
**[விடை : செத்து + இறந்த]**

5. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
அ) பருத்திஎல்லாம் ஆ) பருத்தியெல்லாம்
இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம் **[விடை : பருத்தியெல்லாம்]**

**★ குறுவினா ★**

**1. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?**

கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணம் எமனைப்போல வந்த பெருமழையும், சுழல் காற்றும் என கோணக்காத்துப் பாட்டு கூறுகிறது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**2. புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?**

➢ தொண்டைமான் நாட்டில் புயல் காற்றினால் மரங்களும், அழகிய சுவர்களை உடைய மாடிவீடுகளும் அடியோடு வீழ்ந்தன.

➢ ஆண்களும், மனைவி மக்களும் 'கூ கூ' என அலறியடித்து ஓடினர்.

**3. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?**

➢ சித்தர்கள் வாழும் மலையே கொல்லிமலை.

➢ அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் எல்லாம் புயல் அடித்தது என்று பாடல் கூறுகிறது.

## ★ சிறுவினா ★

**1. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

➢ புயல் காற்றினால் வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாய் போயின.

➢ தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் ஒடிந்து சின்னா பின்னமாயின.

**2. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் யாவை?**

➢ திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று, வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன.

➢ அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. அடிக்கடி புயலால் பாதிக்கப்படும் பகுதி ______________. **[விடை : தமிழ்நாடு]**
2. கோணக்காத்துப் பாட்டு பாடலில் குறிப்பிடும் தெய்வம் ______________. **[விடை : முருகன்]**
3. புலவர் செ. இராசு தொகுத்த நூல் ______________. **[விடை : பஞ்சக் கும்மிகள்]**

### குறுவினா

**1. எந்த நாட்டில் பருத்திச் செடிகள் சிதைந்தன?**

காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் சிதைந்து வெறும் குச்சிகளாக மாறின.

**2. எப்பகுதிகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர்?**

ஆர்க்காடு முதல் மைசூர் வரை வீசிய புயலால் சாலைகளில் சென்ற மக்கள் தடுமாறித் தவித்தனர்.

**3. ஆடுமாடுகள் எந்தெந்தப் பகுதிகளில் இறந்தன?**

ஏராளமான ஆடுமாடுகள் தெத்துக்காடு, காளப்ப நாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் இறந்தன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## சிந்தனை வினா

**இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

- கடற்கரை ஓரத்தில் வசிப்பதைத் தவிர்த்து, கடலை விட்டு சில தூரங்கள் தள்ளி வசித்து வந்தால் பாதுகாப்பாக வாழலாம்.
- நிலநடுக்கம் ஏற்படும் சூழ்நிலை அறிந்ததும் கட்டடத்தை விட்டு வெளியேறி வெட்டவெளியில் தங்கினால் பாதுகாப்பாக இருக்கலாம்.
- காட்டுத் தீ ஏற்படும் சூழ்நிலையில் அருகில் வசிப்போர் உடனடியாக வெளியேறி நகர்ப்புறத்தில் வந்து தங்குதல் பாதுகாப்பாக அமையும்.
- வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயங்களில் நீர்நிலை அருகில் வாழ்வோர் மேடான பகுதிக்குச் சென்று தங்கினால் பாதுகாப்பாக இருக்கலாம்.

உரைநடை உலகம்

இயல் இரண்டு

# நிலம் பொது

7BDRNS

## நுழையும் முன்

அமெரிக்காவில் பூஜேசவுண்ட் என்னுமிடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்கள் **சுகுவாமிஷ் பழங்குடியினர்.** அவர்களின் தலைவராக விளங்கியவர் **சியாட்டல்.** அவர் அப்பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் சிதையாமல் காக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்குக் கடிதம் ஒன்று எழுதினார். அக்கடிதத்தைப் படித்தறிவோம்.

## நூல் வெளி

இக்கட்டுரை **பக்தவத்சல பாரதி** எழுதிய **தமிழகப் பழங்குடிகள்** எனும் நூலில் இருந்து எடுத்துத்தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

1. **நில வளத்தைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய இன்றியமையாப் பணிகளைத் தொகுத்து எழுதுக.**
   - மட்கும் குப்பைகள், மட்காத குப்பைகள் எனப் பிரித்தெடுத்து சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.
   - தொழிற்சாலைக் கழிவுகளை நிலத்தில் கலக்க விடாமல் அவற்றை சுத்திகரிப்பு செய்ய வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



- ஆறு முதலிய நீர்நிலைகளை தக்கவைப்பது மணல்தான். ஆகையால் மணல் அள்ளுவதை முற்றிலும் தடுக்க வேண்டும்.
- விவசாயத்திற்கு செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.
- நிலம் எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்க அதிமான மரங்களை நடவேண்டும்.
- விளைநிலங்களை, அழித்து விட்டு, மனைகளாக உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

**2. தமிழ்நாட்டின் இயற்கை வளங்கள் குறித்த படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.**



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ____________ மதிக்கின்றனர்.
   அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக
   **[விடை : தாயாக]**
2. இன்னோசை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை
   **[விடை : இனிமை + ஓசை]**
3. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) பால்ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும் ஈ) பாஊறும்
   **[விடை : பாலூறும்]**

### ★ தொடரில் அமைத்து எழுதுக ★

1. வேடிக்கை - எங்கள் ஊர்த்திருவிழாவில் **வேடிக்கை** நிகழ்ச்சி நடைபெற்றது.
2. உடன்பிறந்தார் - என்னுடன் பயிலும் மாணவர்களை **உடன்பிறந்தவர்**களாக மதிப்பேன்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## ★ குறுவினா ★

**1. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?**

- இந்தப் பூமிக்கு அணுக்கமாய் உள்ள வானம், காற்றின் தூய்மை, நீரின் உயர்வு ஆகிய அனைத்தும் யாருக்கும் சொந்தமானவை அல்ல.
- எனவே, அவற்றை யாரும் விலைகொடுத்து வாங்க முடியாது.

**2. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?**

- இந்தப் பூமியின் ஒவ்வொரு துகள்களும் செவ்விந்தியர்களுக்கு புனிதமாகும்.
- இந்தப் பூமியை செவ்விந்தியர்கள் எப்பொழுதும் மறப்பதேயில்லை.
- ஏனெனில், செவ்விந்தியர்கள் இந்தப் பூமியைத் தாயாகக் கருதுகின்றனர்.

**3. எதனைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?**

செவ்விந்தியர்கள் வாழும் பகுதியில்,
எருமைகள் கொல்லப்படுதல்,
எங்குப் பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரித்தல்,
தொன்மையான மலைகளை மறைத்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருவதையும் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்.

## ★ சிறுவினா ★

**1. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.**

- ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவு கூர்பவையாகும்.
- நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்களேயாகும்.
- ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள் தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள்.
- எம்மக்களின் தோணிகளைச் சுமந்து சென்றும், குழந்தைகளுக்கு உணவளிக்கவும் செய்கின்றனர்.
- இங்குள்ள ஆறுகளிலும் ஓடைகளிலும் ஓடும் நீர் என்னுடைய மூதாதையரின் குருதியாகும் என நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறுகிறார்.

**2. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?**

- நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியதாகும்.
- நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள்.
- மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள்.
- மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல் சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம் என்று சியாட்டல் கூறுகிறார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



## ★ நெடுவினா ★

**1. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

- இந்தப் பூமியின் ஒவ்வொரு துகளும் எம் மக்களுக்குப் புனிதமானதாகும்.
- அம்மக்கள், இந்தப் பூமியை எப்பொழுதும் மறப்பதேயில்லை. ஏனெனில், இதுவே எமக்குத் தாயாகும்.
- நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியதாகும்.
- இங்குள்ள நறுமணம் மிகுந்த மரங்கள் யாவும் எமது சகோதரிகள்.
- மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள்.
- மலை முகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல் சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.
- எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும்.
- இந்நிலம் எங்கள் தாயாகவும், எமது உறவுமுறையாரின் வளமான வாழ்வால் ஆனதாகும்.
- இந்நிலத்தை மதிக்க நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதுபோல் உங்கள் குழந்தைகளுக்கும் நீங்கள் சொல்லிக் கொடுங்கள்.
- இந்நிலத்தின் மீது எது வந்து விழுந்தாலும் அவை எல்லாம் பூமித்தாயின் மீது விழுவனவேயாகும். இதன்மீது மக்கள் துப்பக்கூடுமானால் தன் தாயின்மீது துப்புவதற்கு ஒப்பானதாகும்.
- இந்நிலமானது கடவுளும் மதிக்கக்கூடிய ஒன்றாகும். நீங்கள் படுத்துறங்கிய இடத்தை நீங்களே அசுத்தப்படுத்தினால் ஒருநாள் இரவு நீங்கள் உங்கள் குப்பைகளுக்குள்ளேயே மூச்சு முட்டி இறந்துபோகும் நிலை ஏற்படும்.
- நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக இருந்தால் எங்கள் நிலத்தை நாங்கள் நேசிப்பது போலவே தாங்களும் நிலத்தை நேசியுங்கள் என்று தாய்மண் மீது செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுகிறார்.

## ★ சிந்தனை வினா ★

**நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?**

- மட்கும் குப்பைகள், மட்காத குப்பைகள் என பிரித்தெடுத்து சரியான முறையில் பயன்படுத்த வேண்டும்.
- தொழிற்சாலைக் கழிவுகளை நிலத்தில் கலக்க விடாமல் அவற்றை சுத்திகரிப்பு செய்ய வேண்டும்.
- ஆறு முதலிய நீர்நிலைகளை தக்கவைப்பது மணல்தான். ஆகையால் மணல் அள்ளவதை முற்றிலும் தடுக்க வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



- விவசாயத்திற்கு செயற்கை உரங்களைத் தவிர்த்து இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும்.
- நிலம் எப்பொழுதும் குளிர்ச்சியாக இருக்க அதிமான மரங்களை நடவேண்டும்.
- விளைநிலங்களை, அழித்து விட்டு, மனைகளாக உருவாக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

விரிவானம்

இயல் இரண்டு


# வெட்டுக்கிளியும் சருகுமானும்

W4LG3J

## நுழையும் முன்

தமிழ்நாடு, கேரள மாநிலங்களின் எல்லைக்கு அருகேயுள்ள பரம்பிக்குளம், ஆனைமலை போன்ற பகுதிகளில் காடர்கள் என்னும் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். தமது முன்னோர்கள் காடுகளில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை வருங்காலத் தலைமுறையினர் மறந்துவிடக் கூடாது என்று எண்ணினர். எனவே காடுகள், செடிகொடிகள், விலங்குகள் தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்றைப் படிப்போம்.

## மனவரைபடம்




## தெரிந்து கொள்வோம்

பரம்பிக்குளம், ஆனைமலைப் பகுதிகளில் காடர்கள் வசிக்கும் சிற்றூர்கள் பல உள்ளன. காடர்கள் மிகச்சிறிய பழங்குடிச் சமுதாயத்தினார். தாங்கள் பேசும் மொழியை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



"ஆல்அலப்பு" என்று அழைக்கின்றனர். அவர்களின் வாழ்கைமுறை பற்றிய எழுத்துக் குறிப்புகள் ஏதும் அவர்களிடம் இல்லை.

## நூல் வெளி

**மனிஷ் சாண்டி, மாதுரி ரமேஷ்** ஆகியோர் காடர்களின் கதைகள் சிலவற்றைத் தொகுத்துள்ளனர். அவற்றை **யானையோடு பேசுதல்** என்னும் தலைப்பில் **வ. கீதா** தமிழாக்கம் செய்துள்ளார். அந்நூலில் இருந்து ஒரு கதை இங்குத் தரப்பட்டுள்ளது.

## கற்பவை கற்றபின்

**'வெட்டுக்கிளியும் சருகுமானும்', கதையை நாடகமாக நடித்துக் காட்டுக.**

**காட்சி - 1**

பங்கேற்போர் : வெட்டுக்கிளி, சருகுமான்(கூரன்).

இடம் : அடர்ந்த காட்டில் ஓர் ஓடைஅதன் அருகில் ஒரு மரம்.

நேரம் : மாலை.

வெட்டுக்கிளி : என்ன கூரன். தங்களைப் பார்த்து நீண்ட நாளாகிவிட்டதே! எங்கே போயிருந்தாய்? ஏன் இங்கும் அங்கும் பதற்றத்துடன் ஓடுகிறாய்?

சருகுமான் : நான் அந்தக் காட்டின் கோடியில் இருந்தேன். இப்போது உன்னிடம் பேச எனக்கு நேரமில்லை. பித்தக்கண்ணு என்னை விரட்டிக் கொண்டு வருகிறது. நான் எங்கேயாவது ஒளிய வேண்டும். எனக்கு அதிகமாக சோர்வாக இருக்கிறது. பல மணி நேரம் ஓடி ஓடி களைப்பாக இருக்கிறது. மரத்தடியில் ஒளிந்துகொள்கிறேன்.

வெட்டுக்கிளி : சரி, சரி, ஒளிந்து கொள்!

**காட்சி - 2**

பங்கேற்போர் : வெட்டுக்கிளி, சருகுமான்(கூரன்), பித்தக்கண்ணு (சிறுத்தை)

இடம் : அடர்ந்த காட்டில் ஓர் ஓடை அதன் அருகில் ஒரு மரம்.

நேரம் : மாலை.

பித்தக்கண்ணு : (உறுமியவாறே அங்கு வந்தது) கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்கு சென்றாள் என்று உனக்குத் தெரியுமா?

சருகுமான் : (தாவித் தாவி குதித்துக் கொண்டு) கூரன் இருக்குமிடம் எனக்குத் தெரியாதே! (இவ்வாறு கூறிக்கொண்டு கூரன் இருக்கும் இடம் அருகில் சென்றது).

[பித்தக்கண்ணு தன் மதி நுட்பத்தால் அறிந்து கூரன் இருக்குமிடம் அருகில் சென்று நுகர்தல். பூனையின் துர்நாற்றம் வீசியதால் அந்த இடத்தை விட்டு நகன்றது.]

சருகுமான் : (கோபத்துடன்) முட்டாள் வெட்டுக்கிளியே! பித்தக்கண்ணு முன் இப்படியா குதிப்பது? நான் இன்ற செத்துப் பிழைத்திருக்கிறேன்.

வெட்டுக்கிளி : இல்லை, இல்லை... என்னை மன்னித்து விடு.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in


சருகுமான் : இனிமேல் இப்படிச் செய்தாய் என்றால் என் தங்கக் கால்களால் மிதித்துக் கொன்றுவிடுவேன். (என்று தன் கூர்மையான கால்களை மண்மீது அழுத்தியது.)
[கூரனின் கூர்மையான கால்கள் தன்மீது பட்டுவிடுமோ என இன்றும் வெட்டுக்கிளி குதித்துக் கொண்டே இருந்தது.]

## மதிப்பீடு

**'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை :**

நம் முன்னோர்கள் காடுகளில் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை வருங்காலத் தலைமுறையினர் மறந்துவிடக்கூடாது என்று எண்ணி, காடுகள், செடிகொடிகள், விலங்குகள், தொடர்பான கதைகளைத் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன் பேத்திகளுக்கும் சொல்லி வந்தனர். அத்தகைய கதைகளுள் ஒன்றைப் பின்வருமாறு காணலாம்.

**வெட்டுக்கிளியும் சருகுமானும் :**

நடுக்காட்டில் குறிஞ்சி நிலப் புதரில் பச்சை வெட்டுக்கிளி வாழ்ந்து வந்தது. ஆனால் அது ஒரு வாயாடியாகும். ஒரு மாலை நேரத்தில் கூரன் என்ற ஒரு பெண் சருகுமானைக் கண்டது. என்ன கூரன்? உன்னைப் பார்த்து நெடுநாளாகி விட்டதே! நீ எங்கே போயிருந்தாய்? உடனே, அதற்கு சருகுமான், இந்தக் காட்டின் அந்தக் கோடியில் இருந்தேன். ஆனால், உன்னிடம் இப்பொழுது பேச எனக்கு நேரமில்லை. என்னைப் பித்தக்கண்ணு துரத்திக் கொண்டு வருகிறது. நான் இங்கு ஒளிந்து கொள்கிறேன். பித்தக்கண்ணு உன்னிடம் கேட்டால் எனக்குத் தெரியாது என்று கூறிவிடு என்றது. சரி என்ற வெட்டுக்கிளியும் கூறியது.

**வெட்டுக்கிளியும் பித்தக்கண்ணும் :**

கூரனைத் தேடி வந்த பித்தக்கண்ணு (உறுமிக் கொண்டே) கூரன் இங்கு வந்தாளா? என்று கேட்டது. அதற்கு வெட்டுக்கிளி பித்தக்கண்ணுவை அருகில் பார்த்தவுடன் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்து குதித்து கூரன் (சருகுமான) ஒளிந்திருக்கும் இடத்தின் அருகே சென்றது. உடனே, கூரன் ஒளிந்திருக்கும் இடத்தருகே சென்று நுகர்ந்து பார்த்தது, அங்கு புனுகுப் பூனையின் துர்நாற்றமே வீசியது. உடனே அவ்விடத்தை விட்டு வேறு பக்கம் தேடச் சென்றது.

**சருகுமானும் வெட்டுக்கிளியும் :**

கூரன் (சருகுமான்) புதரிலிருந்து வெளியே வந்ததும் கோபமாக முட்டாள் வெட்டுக்கிளியே! இனிமேல் நீ இப்படிச் செய்தால், மறுபடியும் வந்து உன்னை என் கூர்மையான பாதத்தால் மிதித்து நசுக்கிவிடுவேன் என்று கூறிக் கொண்டு காட்டுக்குள் ஓடியது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**முடிவுரை :**

அன்றிலிருந்து சருகுமானி (கூரன்) ன் கூர்மையான பாதங்கள் தன்மீது பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் இன்றும் வெட்டுக்கிளிகள் ஓர் இடத்தில் நிலைத்து நில்லாமல் குதித்துக் கொண்டே உள்ளன.

நாம் வெட்டுக்கிளிபோல் வாழாமல் பிறருக்கு நன்மை செய்தே வாழ வேண்டும்.

**நீதி :**

வாக்குறுதி கொடுத்தால் மீறக் கூடாது....

---


இயல் இரண்டு

கற்கண்டு

# வினைமுற்று

PBI7PL

## மனவரைபடம்




---

## தெரிந்து கொள்வோம்

1. விதித்தல் பொருளில் வரும் வியங்கோள் வினைமுற்று. தன்மை இடத்தில் வராது.
2. இயர், அல் ஆகிய இரண்டு விகுதிகள் தற்கால வழக்கில் இல்லை. செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**‘வாழ்க’ என்னும் சொல்லை ஐந்து பால்களிலும், மூன்று இடங்களிலும் இடம் பெறுமாறு தொடர்களை எழுதுக.**

(எ.கா)
அவன் வாழ்க (ஆண்பால்)
அவள் வாழ்க (பெண்பால்)
அவர்கள் வாழ்க (பலர்பால்)
அது வாழ்க (ஒன்றன் பால்)
அவை வாழ்க (பலவின்பால்)

நாம் வாழ்க. (தன்மை)
நீ வாழ்க (முன்னிலை)
அவர்கள் வாழ்க (படர்க்கை)

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. - இத்தொடரிலுள்ள வினைமுற்று ____________.
அ) மாடு ஆ) வயல் இ) புல் ஈ) மேய்ந்தது
**[விடை : மேய்ந்தது]**

2. பின்வருவனற்றுள் இறந்தகால வினைமுற்று ____________.
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
**[விடை : படித்தான்]**

3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ____________.
அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய **[விடை : ஓடு]**

### ★ சிறுவினா ★

**1. வினைமுற்று என்றால் என்ன?**

ஒரு வினை, எச்சப் பொருளில் அமையாமல் வந்து, பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்களை முற்றுவினை அல்லது வினைமுற்று என்பர்.

**2. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?**

தெரிநிலை வினைமுற்று செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றைக் காட்டும்.

**3. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?**

வியங்கோள் வினைமுற்று விகுதிகள் க, இய, இயர், அல் ஆகியனவாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**4. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| ➢ முன்னிலையில் வரும்<br>➢ ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு.<br>➢ கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும்.<br>➢ விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | ➢ இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.<br>➢ ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை.<br>➢ வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும்.<br>➢ விகுதி பெற்றே வரும். |

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. வினைமுற்று ____________ வகைப்படும். **[விடை : இரண்டு]**
2. செயலை ____________ என்றும் கூறுவர். **[விடை : வினை]**
3. ஒன்றன் செயலைக் குறிக்கும் சொல் __________ எனப்படும். **[விடை : வினைச்சொல்]**
4. பாடம் படி - என்பது ____________ வினைமுற்று. **[விடை : ஏவல் வினைமுற்று]**
5. ஒழிக என்பது ____________ வினைமுற்று. **[விடை : வியங்கோள் வினைமுற்று]**
6. மாணவி கட்டுரை எழுதினாள் - இத்தொடரில் செய்பொருள் ____________. **[விடை : கட்டுரை]**

### சிறுவினா

**1. வினைமுற்று எத்தனை வகைப்படும், அவை யாவை?**

வினைமுற்று இரண்டு வகைப்படும். அவை.

➢ தெரிநிலை வினைமுற்று

➢ குறிப்பு வினைமுற்று.

**2. குறிப்பு வினைமுற்று என்றால் என்ன?**

பொருள், முதல் ஆறினுள் ஒன்றனை அடிப்படையாகக் கொண்டு, காலத்தை வெளிப்படையாகக் காட்டாது செய்பவரை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று, குறிப்பு வினைமுற்று எனப்படும்.

**3. ஏவல் வினைமுற்று என்றால் என்ன?**

தம் முன் உள்ள ஒருவரை ஒரு செயலைச் செய்யுமாறு ஏவும் வினைமுற்று, ஏவல் வினைமுற்று எனப்படும். இது ஒருமை, பன்மை ஆகிய இருவகையிலும் வரும்.

**4. வியங்கோள் வினைமுற்று எவ்வெப் பொருள்களில் வரும்?**

வியங்கோள் வினைமுற்று வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களில் வரும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in



## மொழியை ஆள்வோம்

### கேட்க

**இயற்கை என்னும் தலைப்பில் அமைந்த புதுக்கவிதைகளின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு மகிழ்க.**

"தினந்தோறும் காணும் அழகு ஓவியம் இயற்கை
இவ்வுலகையே வியக்க வைக்கிறது உன் அழகு
புல்வெளி மேல் படர்ந்திருக்கும் பனித்துளிகள் அழகு
சில்லென்று தூறும் மலைச்சாரல் அழகு. மரங்கள்
ஒன்றோடு ஒன்று இணைந்து பாடும் இன்னிசை அழகு
மழைக்காலங்களில் மாலையில் வரும் வானவில் அழகு
வண்ண வண்ணங்களாய் பூக்கும் பூக்கள் அழகு"

[இவற்றைப் போல் பல கவிதைகளைக் கேட்டு மகிழுங்கள்].

### கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக

**இயற்கையைப் பாதுகாப்போம்.**

அனைவருக்கும் என் இனிய வணக்கம். இயற்கை, நாம் நலமுடன் வளமுடன் வாழ வழிவகை செய்யும். இன்றைய சூழ்நிலையில் நாம் இயற்கையைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தூய்மையான காற்றையும், நீரையும் நாம் பயன்படுத்த வேண்டும். நம் முன்னோர்கள் இயற்கையைத் தெய்வமாக வழிபட்டனர்.

தட்பவெட்ப நிலை மாற்றத்தினால் அதிகரித்து வரும் வெப்பத்தால் உயிர்த்தாவரங்கள் அழியும் நிலையில் உள்ளன. தற்போது பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் நீர்நிலையில் கலப்பதால் பிராணவாயு குறைந்து நீர்வாழ் உயிரினங்கள் பெருமளவு அழியும் சூழல் உள்ளது.

வீடுகள் கட்டுவதற்கும் சாலை விரிவாக்கம் செய்வதற்கும் பெருமளவில் மரங்கள் வெட்டப்படுகின்றன. அதனால், வெப்பம் அதிகரிக்கின்றன. மழை சரிவரப் பெய்யாமல் இயற்கை வளங்கள் அழிந்து வருகின்றன. எனவே நாம் இயற்கையைப் போற்றுவோம், இன்பமாய் வாழ்வோம். இயற்கையைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமை மட்டுமில்லாமல் பொறுப்பும் ஆகும். இயற்கையை அழியவிடாமல் தடுக்க அரசு மக்களிடையே தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இயற்கையில்லா வாழ்க்கை இன்னல் வாழ்க்கை என்று கூறி என் சிற்றுரையை முடிக்கிறேன்.

### தமிழ் எண்கள் அறிவோம்

**விடுபட்ட கட்டங்களை நிரப்புக.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கக | கஉ | கஙு | கச | கரு | கசு | கஎ | கஅ | கசூ | உ0 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| உக | உஉ | உஙு | உச | உரு | உசு | உஎ | உஅ | உசூ | ஙு0 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| ஙுக | ஙுஉ | ஙுஙு | ஙுச | ஙுரு | ஙுசு | ஙுஎ | ஙுஅ | ஙுசூ | ச0 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| சக | சஉ | சஙு | சச | சரு | சசு | சஎ | சஅ | சசூ | ரு0 |

## வண்ணமிடப்பட்டுள்ள எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக

1. உலக ஈர நில நாள் பிப்ரவரி 2. உ
2. உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16. கசு
3. உலக இயற்கை நாள் அக்டோபர் 3. ஙு
4. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6. சு
5. உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு நாள் அக்டோபர் 5. ரு

## அறிந்து பயன்படுத்துவோம்

### தொடர் வகைகள்

தொடர்கள் பொருள் அடிப்படையில் நான்கு வகைப்படும்.

**செய்தித் தொடர்**

ஒரு செய்தியைத் தெளிவாகக் கூறும் தொடர் செய்தித் தொடர் ஆகும்.

(எ.கா) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.

**வினாத்தொடர்**

ஒருவரிடம் ஒன்றை வினவுவதாக அமையும் தொடர் வினாத்தொடர் ஆகும்.

(எ.கா) சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

**விழைவுத் தொடர்**

ஏவல், வேண்டுதல், வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும் தொடர் விழைவுத் தொடர் ஆகும்.

(எ.கா) இளமையில் கல். (ஏவல்.

உன் திருக்குறள் நூலைத் தருக. (வேண்டுதல்)

உழவுத் தொழில் வாழ்க. (வாழ்த்துதல்)

கல்லாமை ஒழிக. (வைதல்)

**உணர்ச்சித் தொடர்**

உவகை, அழுகை, அவலம், அச்சம், வியப்பு முதலான உணர்ச்சிகளை உணர்த்தும் தொடர் உணர்ச்சித் தொடர் எனப்படும்.

(எ.கா) அடடா! என் தங்கை பரிசு பெற்றாள்! (உவகை)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in


ஆ! புலி வருகிறது! (அச்சம்)
பழந்தமிழ் இலக்கியங்கள் பல அழிந்துவிட்டனவே! (அவலம்)
ஆ! மலையில் உயரம்தான் என்னே! (வியப்பு)

## கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக

1. முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். **செய்தித் தொடர்.**
2. கடமையைச் செய். **விழைவுத் தொடர்.**
3. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! **உணர்ச்சித் தொடர்.**
4. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? **வினாத்தொடர்.**

## தொடர்களை மாற்றுக

(எ.கா) நேற்று நம் ஊரில் மழை பெய்தது. (வினாத்தொடராக மாற்றுக)
நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?

1. காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக.)
   **விடை :** ஆ! காட்டின் அழகுதான் என்னே!
2. அந்தோ! பூனையில் காலில் அடிபட்டுவிட்டதே! (செய்தித்தொடராக மாற்றுக.)
   **விடை :** பூனையின் காலில் அடிபட்டுவிட்டது.
3. அதிகாலையில் துயில் எழுவது நல்லது. (விழைவுத் தொடராக மாற்றுக.)
   **விடை :** அதிகாலையில் துயில் எழு.
4. முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா? (செய்தித்தொடராக மாற்றுக.)
   **விடை :** முகில்கள் திரண்டால் மழை பெய்யும்.
5. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத்தொடராக மாற்றுக.)
   **விடை :** புலி நடமாட்டம் எங்கு உள்ளது?

## கடிதம் எழுதுக

**விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.**

10, வள்ளலார் தெரு,
திருவில்லிபுத்தூர்,
09.08.20XX.

அன்புள்ள நண்பனுக்கு,

இங்கு நான் மற்றும் நண்பர்கள் என் குடும்பத்தார் அனைவரும் நலமாக உள்ளோம்.

இதே போல் அங்கு நீ மற்றும் நண்பர்கள் அனைவரும் நலமாய் இருக்க இறைவனை வேண்டுகிறேன்.

கடந்த வாரம் உங்கள் பள்ளியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கூடைப்பந்துப் போட்டியில் உனது அணி வெற்றி பெற்றதைச் செய்தித்தாள் மூலம் அறிந்தேன். அதில் நீ சிறந்த விளையாட்டு வீரனாகத் தேர்ந்தெடுத்து பரிசு பெற்றதை அறிந்து நானும் என் பெற்றோரும் மகிழ்ச்சி அடைந்தோம்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



நீ விளையாட்டிலும், படிப்பிலும் மேலும் பல சாதனைகள் படைத்து பள்ளிக்கும், உன் பெற்றோருக்கும் பெருமை சேர்க்குமாறு உன்னை வாழ்த்துகிறேன்.

இடம் : திருவில்லிபுத்தூர்.
நாள் : 09.08.20xx.

இப்படிக்கு,
அன்புத் தோழன்,
மு. பாலமுரளி.

உறைமேல் முகவரி:
இரா. முத்தமிழன்,
36, முல்லைத் தெரு,
தென்காசி - 2.

## மொழியோடு விளையாடு

### உரிய வினைமுற்றுகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புக

| | நட | உண் | உறங்கு |
|---|---|---|---|
| ஆண்பால் | நடக்கிறான் | உண்கிறான் | உறங்குகிறான் |
| பெண்பால் | நடக்கிறாள் | உண்கிறாள் | உறங்குகிறாள் |
| பலர் பால் | நடக்கிறார்கள் | உண்கிறார்கள் | உறங்குகிறார்கள் |
| ஒன்றன் பால் | நடந்தது | உண்டது | உறங்கியது |
| பலவின் பால் | நடக்கின்றன | உண்கின்றன | உறங்குகின்றன |
| தன்மை | நடக்கிறேன் | உண்கிறேன் | உறங்குகிறேன் |
| முன்னிலை | நடக்கிறாய் | உண்கிறாய் | உறங்குகிறாய் |
| படர்க்கை | நடந்தான் | உண்டான் | உறங்கினான் |
| இறந்த காலம் | நடந்தது | உண்டது | உறங்கியது |
| நிகழ் காலம் | நடக்கிறது | உண்கிறது | உறங்குகிறது |
| எதிர் காலம் | நடப்பான் | உண்பான் | உறங்குவான் |

### வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக

1. நடக்கிறது - நட
2. போனான் - போ
3. சென்றனர் - செல்
4. உறங்கினாள் - உறங்கு
5. வாழிய - வாழ்
6. பேசினாள் - பேசு
7. வருக - வா
8. தருகின்றனர் - தா



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



9. பயின்றாள் - பயில்
10. கேட்டார் - கேள்

## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் ....**

1. நீர்நிலைகளைத் தூய்மையாக வைக்க உதவுவேன்.
2. மரம் நட வாய்ப்புள்ள இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பழங்குடியினர் - Tribes. | | 5. | மலைமுகடு - Ridge. | |
| 2. | சமவெளி - Plain. | | 6. | வெட்டுக்கிளி - Locust. | |
| 3. | பள்ளத்தாக்கு - Valley. | | 7. | சிறுத்தை - Leopard. | |
| 4. | புதர் - Thicket. | | 8. | மொட்டு - Bud. | |

இயல் இரண்டு

வாழ்வியல்

# திருக்குறள்

E4QW4D

## நுழையும் முன்

திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று; அஃது ஒரு வாழ்வியல் நூல்; எக்காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் பொருந்தும் அறக்கருத்துகளைக் கொண்ட நூல். திருக்குறளின் பெருமையை விளக்க,'திருவள்ளுவ மாலை' என்னும் நூல் எழுதப்பட்டிருப்பதே அதற்குச் சான்றாகும். இத்தகைய பெருமை கொண்ட திருக்குறளைப் பயில்வோம்.

### மனவரைபடம்


திருவள்ளுவர்
- பெருநாவலர்
- முதற்பாவலர்
- நாயனார்



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in






## நூல் வெளி

**பெருநாவலர், முதற்பாவலர், நாயனார்** முதலிய பல சிறப்புப் பெயர்களால் குறிக்கப்படும் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்பர்.

திருக்குறள் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல் ஆகும். இந்நூல் **அறம், பொருள், இன்பம்** என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. அறத்துப்பால் **பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்** என்னும் நான்கு இயல்களைக் கொண்டது. பொருட்பால் **அரசியல், அமைச்சியல், ஒழிபியல்** என்னும் மூன்று இயல்களைக் கொண்டது. இன்பத்துப்பால் **களவியல், கற்பியல்** என்னும் இரண்டு இயல்களைக் கொண்டது.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ____________.
   அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை
   இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை **[விடை : நடுவுநிலைமை]**
2. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ____________.
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர்
   இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர். **[விடை : கல்லாதவர்]**
3. வல்லுருவம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) வல் + உருவம் ஆ) வன்மை + உருவம்
   இ) வல்ல + உருவம் ஈ) வல்லு + உருவம்.
   **[விடை : வன்மை + உருவம்]**
4. நெடுமை + தேர் என்பதனைச் சேர்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர் இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்
   **[விடை : நெடுந்தேர்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



5. வருமுன்னர் எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ____________.
அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
அ) உவமை அணி ஈ) உருவக அணி **[விடை : உவமை அணி]**

## ★ குறுவினா ★

**1. சான்றோர்க்கு அழகாவது எது?**

சான்றோர்க்கு அழகாவது தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே ஆகும்.

**2. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?**

பழிவரு முன்னே சிந்தித்து தம்மைக் காத்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல்போர் போல அழிந்துவிடும்.

**3. 'புலித்தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?**

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக்கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றதாகும்.

## ★ திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக ★

1. தக்கார் தகவிலரெ ன்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.

**விடை :** "தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்."

2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.

**விடை :** "தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
இடங்கண்ட பின்அல் லது."

## ★ கோடிட்ட இடத்தை நிரப்புக ★

1. " வலியில் நிலைமையான் வல்லுருவம் **பெற்றம்**
புலியின்தோல் **போர்த்து** மேய்ந் தற்று".

2. விலங்கொடு **மக்கள்** அனையர் **இலங்குநூல்**
கற்றாரோடு ஏனை யவர்".

## ★ சீர்களை முறைப்படுத்தி எழுதுக ★

யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது
வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.

**விடை:** "கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்".



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



★ **படங்களுக்குப் பொருத்தமான திருக்குறளை எழுதுக** ★



வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.



கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து.

★ **அணி இலக்கணம்** ★

**1. உவமையணி**

**இலக்கணம் :**

ஒரு செய்யுளில் உவமை ஒரு தொடராகவும் உவமேயம் (பொருள்) ஒரு தொடராகவும் வந்து உவம உருபு வெளிப்பட்டு வருவது உவமையணியாகும்.

**சான்று 1 : "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி".**

**விளக்கம் :**

தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

**பொருத்தம் :**

**உவமை** : சமன்செய்து சீர்தூக்கும் கோல்

**உவமேயம்** : அமைந்து ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி.

**உவம உருபு** : போல.

இவ்வாறு உவமை ஒரு தொடராகவும், உவமேயம் (பொருள்) மற்றொரு தொடராகவும் வந்து 'போல' என்னும் உவம உருபு வெளிப்பட்டு வந்துள்ளதால் இது உவமையணியாகும்.

**சான்று 2 : "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்".**

**விளக்கம் :**

பழிவருமுன்னே சிந்தித்து தம்மைக் காத்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கை, நெருப்பின் அருகில் வைக்கப்பட்ட வைக்கோல் போர் போல அழிந்து விடும்.

**பொருத்தம் :**

**உவமை** : எரிமுன்னர் வைத்தூறு



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**உவமேயம்** : வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை

**உவம உருபு** : போல.

இவ்வாறு உவமை ஒரு தொடராகவும் உவமேயம் (பொருள்) ஒரு தொடராகவும் வந்து "போல" என்னும் உவம உருபு வெளிப்பட்டு வந்துள்ளதால் இது உவமையணியாகும்.

---

## 2. இல்பொருள் உவமையணி

**இலக்கணம் :**

உலகில் இல்லாத பொருளை இருப்பது போலக் கற்பனை செய்து அதனை உவமையாய்க் காட்டுவது இல்பொருள் உவமையணியாகும்.

**சான்று :** **"வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்**
**புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று".**

**விளக்கம் :**

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக் கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றதாகும்.

**பொருத்தம் :**

"புலியின் தோலைப் போர்த்திக் கொண்ட பசு" பயிரை மேய்ந்தது என்பது உலகில் நடைபெறாத நிகழ்வாகும். ஆகையால், இக்குறளில் இல்பொருள் உவமையணி அமைந்துள்ளது.

---

## 3. பிறிது மொழிதல் அணி

**இலக்கணம் :**

தான் கருதிய பொருளை வெளிப்படையாய்க் கூறாமல் (உவமையால் தோன்றுமாறு) பிறிதொரு பொருளின் மேல் (உவமேயப் பொருளை) ஏற்றிக் கூறுவது பிறிது மொழிதல் அணி எனப்படும்.

**சான்று :** **"கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்**
**நாவாயும் ஓடா நிலத்து".**

**விளக்கம் :**

வலிமையான சக்கரங்களைக் கொண்ட பெரியதேர் கடலில் ஓட இயலாது. கடலில் ஓடும் கப்பல் தரையில் ஓட இயலாது. அவரவர் தமக்குரிய இடங்களிலேயே சிறப்பாகச் செயல்பட முடியும்.

**பொருத்தம் :**

எவ்விடத்தில் எக்கருவியைப் பயன்படுத்த வேண்டுமோ அவ்விடத்தில் அக்கருவியைப் பயன்படுத்த வேண்டும் என்பதை உணர்த்த வள்ளுவர் நிலத்தில் ஓடும் தேர், கடலில் ஓடாது; கடலில் ஓடும் கப்பல் நிலத்தில் ஓட முடியாது என்ற கருத்து மூலம் பிறிதொன்றைக் கூறுவதால் இது பிறிது மொழிதல் அணியாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



# இயல் 2

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 40**

**I. நிரப்புக.** **5 x 1 = 5**

1. பள்ளிக்குச் சென்று கல்வி ____________ சிறப்பு.
2. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________.
3. செவ்விந்தியர்கள் நிலத்தைத் ____________ மதிக்கின்றனர்.
4. படித்தான் என்பது _____________ கால வினைமுற்று.
5. புலவர் செ. இராசு தொகுத்த நூலின் பெயர் ______________.

**II. பொருத்துக :** 4 x 1 = 4

6. முகில் - அ) இசைக்கருவி
7. காலன் - ஆ) வெட்கம்
8. முழவு - இ) மேகம்
9. நாணம் - ஈ) எமன்

**III. சிறுவினா:** **6 x 1*1/2* = 9**

10. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?
11. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?
12. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?
13. வினைமுற்று என்றால் என்ன?
14. வியங்கோள் வினைமுற்று எவ்வெப்பொருள்களில் வரும்?
15. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?

**IV. குறுவினா:** **2 x 3 = 6**

16. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?
17. இல்பொருள் உவமையணியைச் சான்றுடன் விளக்குக.

**V. சிறுவினா:** **1 x 3 = 3**

18. "ஓடை ஆட ..... எனத் தொடங்கி, போரா ரோடி! என முடிய 'ஓடை'ப் பாடலை எழுதுக.

**VI. கட்டுரை வடிவில் எழுதுக :** **1 x 8 = 8**

19. 'வெட்டுக்கிளியும் சருகுமானும்', கதையைச் சுருக்கி எழுதுக.

**VII. மொழிப்பயிற்சி :** **5 x 1 = 5**

20. தமிழ் எண்களால் எழுதுக :
 உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16 ______________.
21. கடமையைச் செய்ய வேண்டும் (விழைவுத் தொடராக்கு)
22. கலைச்சொல் அறிக : Leopard
23. 'பயின்றாள்' என்ற வினைமுற்றின் வேர்ச்சொல் ____________.
24. 'உறங்கு' என்ற வேர்ச்சொல்லின் இறந்தகால வினைமுற்றைக் கூறுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 40**

**I. நிரப்புக.** **5 x 1 = 5**

1. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ____________.
2. ‘இன்னோசை’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________.
3. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ____________ யும் ஓட்டிவிடும்.
4. நன்மை + செய் - என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
5. வினைமுற்று ___________ வகைப்படும்.

**II. பொருத்துக :** **4 x 1 = 4**

6. வின்னம் - அ) நெல்குத்தும்போது பாடப்படும் பாடல்.
7. சேகரம் - ஆ) இரக்கம்
8. வள்ளைப்பாட்டு - இ) கூட்டம்
9. ஈரம் - ஈ) சேதம்

**III. அடிபிறழாமல் எழுதுக :** **4 x 1 = 4**

10. நன்செய் ............ எனத் தொடங்கி மீட்டும் என முடியும் வரை ‘ஓடை’ப் பாடலை எழுதுக.

**IV. சிறுவினாக்கள் :** **6 x 11/2 = 9**

11. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
12. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?
13. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாவை?
14. பழியின்றி வாழும் வழியாகத் திருக்குறள் கூறுவது யாது?
15. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?
16. நன்செய் நிலம் என்பது யாது?

**V. குறுவினா :** **2 x 3 = 6**

17. உவமையணியைச் சான்றுடன் விளக்குக.
18. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

**VI. விடையளி :** **1 x 7 = 7**

19. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

**VI. மொழிப்பயிற்சி :** **5 x 1 = 5**

20. கலைச்சொல் அறிக : Plain
21. தமிழ் எண்களை எழுதுக : 23 _________; 28 __________
22. முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா?
23. ‘வருக’ என்ற வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல் __________.
24. ‘நட’ என்ற வேர்ச்சொல்லின் உரிய ஒன்றன்பால் வினைமுற்று __________ ஆகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



இயல் மூன்று

# உடலை ஓம்புமின்



**கற்றல் நோக்கங்கள்**

- உடலின் சிறப்பையும் உடல் ஓம்பும் முறைகளையும் இலக்கியங்கள் வழி அறிதல்.
- தமிழர் மருத்துவத்தின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்து பெருமிதம் கொள்ளுதல்.
- மூளையின் செயல்பாடுகள் பற்றிய புதுமையான செய்திகளை அறிந்து மகிழ்தல்.
- எச்சச்சொற்களின் வகைகளை அறிந்து பயன்படுத்துதல்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in



இயல் மூன்று

கவிதைப்பேழை


# நோயும் மருந்தும்

SQ79WW

## நுழையும் முன்

மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பம் தருவன நோய்கள். உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்களால் ஏற்படும் துன்பங்களையும் நோய்கள் என்றே நம் முன்னோர் குறிப்பிட்டனர். அந்நோய்களை நீக்கும் மருந்துகளாக விளங்கும் அறக்கருத்துகளை இலக்கியங்கள் விளக்குகின்றன. அத்தகைய கருத்துகளை விளக்கும் **நீலகேசிப் பாடல்களை** அறிவோம்.

## மனவரைபடம்




## பாடல்

தீர்வனவும் தீராத் திறத்தனவும் செய்ம்மருந்தின்
ஊர்வனவும் போலாதும் உவசமத்தின் உய்ப்பனவும்
யார்வினவும் காலும் அவைமூன்று கூற்றவா
நேர்வனவே ஆகும் நிழல்இகழும் பூணாய் (பா. 113)

*பேர்தற்கு அரும்பிணி தாம்இவை அப்பிணி
தீர்தற்கு உரிய திரியோக மருந்துஇவை
ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்
பேர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே* (பா. 116)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| தீர்வன | - | நீங்குபவை |
| உவசமம் | - | அடங்கி இருத்தல் |
| நிழல்இகழும் | - | ஒளிபொருந்திய |
| பேர்தற்கு | - | அகற்றுவதற்கு |
| திரியோகமருந்து | - | மூன்று யோகமருந்து |
| தெளிவு | - | நற்காட்சி |
| திறத்தன | - | தன்மையுடையன |
| கூற்றவா | - | பிரிவுகளாக |
| பூணாய் | - | அணிகலன்களை அணிந்தவளே |
| பிணி | - | துன்பம் |
| ஓர்தல் | - | நல்லறிவு |
| பிறவார் | - | பிறக்கமாட்டார் |

## பாடலின் பொருள்

ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்த பெண்ணே! நோயின் தன்மைபற்றி யார் வினவினாலும் அது மூன்று வகைப்படும் என அறிவாயாக. மருந்தினால் நீங்கும் நோய்கள் ஒருவகை. எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள் மற்றொரு வகை. அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன இன்னொரு வகை.

அகற்றுவதற்கு அரியவை பிறவித்துன்பங்கள் ஆகும். இவற்றைத் தீர்க்கும் மருந்துகள் மூன்று. **நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம்** என்பவையே அம்மருந்துகள். இவற்றை ஏற்றோர் பிறவித்துன்பத்திலிருந்து நீங்கி உயரிய இன்பத்தை அடைவர்.

## நூல் வெளி

**நீலகேசி** ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று. இந்நூல் சமணசமயக் கருத்துகளை வாதங்களின் அடிப்படையில் விளக்குகிறது. கடவுள் வாழ்த்து நீங்கலாகப் **பத்துச் சருக்கங்களைக்** கொண்டது. சமயத் தத்துவங்களை விவாதிக்கும் தருக்க நூலான இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை. நீலகேசிக் காப்பியத்தின் **தருமவுரைச் சருக்கத்திலிருந்து** இரண்டு பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

**ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.**

**ஐம்பெருங்காப்பியங்கள் :**

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

**ஐஞ்சிறுகாப்பியங்கள் :**

- உதயணகுமார காவியம்
- நாககுமார காவியம்
- யசோதர காவியம்
- சூளாமணி
- நீலகேசி

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. உடல்நலம் என்பது ______________ இல்லாமல் வாழ்தல் ஆகும்.
   அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி **[விடை : பிணி]**
2. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ______________.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து **[விடை : மூன்று]**
3. இவையுண்டார் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.
   அ) இ + யுண்டார் ஆ) இவ் + உண்டார்
   இ) இவை + உண்டார் ஈ) இவை + யுண்டார்
   **[விடை : இவை + உண்டார்]**
4. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.
   அ) தாம்இனி ஆ) தாம்மினி இ) தாமினி ஈ) தாமனி
   **[விடை : தாமினி]**

### ★ குறுவினா ★

**1. நோயின் மூன்று வகைகள் யாவை?**

- மருந்தினால் நீங்கும் நோய்கள்.
- எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்.
- அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன.

**2. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?**

நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகியனவாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



## ★ சிறுவினா ★

**1. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?**

**நோயின் வகைகள் :**

- மருந்தினால் நீங்கும் நோய்கள்.
- எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்.
- அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன.

**தீர்க்கும் வழிகள் :**

நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகியனவாகும்.

## ★ சிந்தனை வினா ★

**துன்பமின்றி வாழ நாம் கைக்கொள்ளவேண்டிய நற்பண்புகள் யாவை?**

- ஒழுக்கம். இவை இல்லையென்றால், நோயுக்கு ஆட்பட்டு துன்பம் அடைய நேரிடும்.
- தன் சுத்தமும், சுற்றுச்சூழலும் காக்கப்பட வேண்டும்.
- சரிவிகித உணவை உட்கொள்ள வேண்டும்.
- உணவே மருந்தாகவும், இனிப்பு, புளிப்பு, காரம், உப்பு ஆகியவற்றைக் குறைத்தும் உட்கொள்ள வேண்டும்.
- நாள்தோறும் நல்ல காட்சிகளைக் கண்டும், அன்றாடம் காலையும் மாலையும் நடைபயிற்சியையும் மேற்கொள்ள வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



இயல் மூன்று

கவிதைப்பேழை

# வருமுன் காப்போம்

HIEYBN

## நுழையும் முன்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது பழமொழி. நோய் வந்தபின் தீரக்க முயல்வதை விட வருமுன் காப்பதே அறிவுடைமை. நல்ல உணவு, உடல்தூய்மை, உடற்பயிற்சி ஆகியவையே நல்ல உடல் நலத்திற்கு அடிப்படை. இவற்றை விளக்கும் பாடல் ஒன்றை அறிவோம்.

## மனவரைபடம்

வருமுன் காப்போம்

- உடலில் உறுதி
- தூய்மையான இடம்
- நடைபயிற்சி
- நீராடிய பின் உண்ணுதல்
- அளவாக உண்ணுதல்
- தூய காற்று நல்ல குடிநீர்
- நன்கு பசித்தபின் உண்ணுதல்
- நன்றாக உறங்குதல்

## பாடல்

*உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;
இடமும் பொருளும் நோயாளிக்கு
இனிய வாழ்வு தந்திடுமோ?

சுத்தம் உள்ள இடமெங்கும்
சுகமும் உண்டு நீயதனை
நித்தம் நித்தம் பேணுவையேல்
நீண்ட ஆயுள் பெறுவாயே!

காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!*

கூழை யேநீ குடித்தாலும்
குளித்த பிறகு குடியப்பா

ஏழை யேநீ ஆனாலும்,
இரவில் நன்றாய் உறங்கப்பா!

மட்டுக் குணவை உண்ணாமல்
வாரி வாரித் தின்பாயேல்
திட்டு முட்டுப் பட்டிடுவாய்!
தினமும் பாயில் விழுந்திடுவாய்!





Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



தூய காற்றும் நன்னீரும்,
சுண்டப் பசித்த பின்உணவும்
நோயை ஓட்டி விடும்அப்பா!
நூறு வயதும் தரும்அப்பா!

அருமை உடலின் நலமெல்லாம்
அடையும் வழிகள் அறிவாயே!
வருமுன் நோயைக் காப்பாயே!
வையம் புகழ வாழ்வாயே!

- கவிமணி தேசிக விநாயகனார்.

## சொல்லும் பொருளும்

| | | |
|---|---|---|
| நித்தம் நித்தம் | - | நாள்தோறும் |
| மட்டு | - | அளவு |
| சுண்ட | - | நன்கு |
| வையம் | - | உலகம் |
| பேணுவையேல் | - | பாதுகாத்தால் |
| திட்டுமுட்டு | - | தடுமாற்றம் |

## பாடலின் பொருள்

உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடல் உறுதியற்ற நோயாளர்க்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வு தாரா. சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் சுகம் உண்டு. நாள்தோறும் நீங்கள் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம்.

காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்லகாற்றைச் சுவாசித்து வருவோரை நோய் அணுகாது. அவர் உயிரைக் கவர எமனும் அணுகமாட்டான். எனவே, நீங்கள் கூழைக் குடித்தாலும் குளித்தபிறகே குடித்தல் வேண்டும்! நீங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும்.

அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டுப் பாயில் விழுவீர்கள். தூய்மையான காற்றும் நல்ல குடிநீரும் நன்கு பசித்த பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் காப்பாற்றும்! நூறாண்டு வாழ வைக்கும். அரிய நம் உடல் நலமோடு இருப்பதற்கான வழிகள் இவை என்பதை அறிவீர்களாக! ஆகவே நோய் வருமுன் காப்போம் உலகம் புகழ வாழ்வோம்!.

## நூல் வெளி

**கவிமணி** எனப் போற்றப்படும் **தேசிக விநாயகனார்,** குமரி மாவட்டம் தேரூரில் பிறந்தவர்; முப்பத்தாறு ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவர்,**ஆசியஜோதி, மருமக்கள் வழி மான்மியம், கதர் பிறந்த கதை** உள்ளிட்ட பல கவிதை நூல்களையும் **உமர்கய்யாம் பாடல்கள்** என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் படைத்துள்ளார்.

**மலரும் மாலையும்** என்னும் நூலிலிருந்து ஒரு பாடல் இங்கு தரப்பட்டுள்ளது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. 'தன் சுத்தம்' என்னும் தலைப்பில் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.**



**2. சுகாதாரம் பற்றிய பழமொழிகளைத் தொகுத்து எழுதுக.**

(எ.கா) சுத்தம் சோறு போடும்.

- ➢ நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- ➢ நொறுங்கத் தின்றால் நூறு வயது.
- ➢ கூழானாலும் குளித்துக் குடி.
- ➢ விருந்தும் மருந்தும் மூன்று வேளை.
- ➢ சுத்தம் சுகம் தரும்.
- ➢ அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்.

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. காந்தியடிகள் ____________ போற்ற வாழ்ந்தார்.

அ) நிலம் ஆ) வையம் இ) களம் ஈ) வானம்

**[விடை : வையம்]**

2. நலமெல்லாம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________.

அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம்

இ) நலம் + எலாம் ஈ) நலன் + எலாம் **[விடை : நலம் + எல்லாம்]**

3. இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ____________.

அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும்

இ) இடமெங்கும் ஈ) இடம்மெங்கும் **[விடை : இடமெங்கும்]**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**வருமுன் காப்போம் - இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

**மோனை**

| | | | | |
|---|---|---|---|---|
| உடலின் | இடமும் | சுத்தம் | நித்தம் | காலை |
| உலகில் | இனிய | சுகமும் | நீண்ட | காற்று |
| காலை | கூழை | திட்டு | அருமை | |
| காலன் | குளித்த | தினமும் | அடையும் | |

**எதுகை**

| | | | |
|---|---|---|---|
| நித்தம் - நித்தம் | | காலை - மாலை | |
| திட்டு - முட்டு | | உடலில் | சுத்தம் |
| | | இடமும் | நித்தம் |
| கூழை | மட்டு | அருமை | |
| ஏழை | திட்டு | வருமுன் | |

**இயைபு**

| | | |
|---|---|---|
| குடியப்பா | பட்டிடுவாய் | விடும்அப்பா! |
| உறங்கப்பா | விழுந்திடுவாய் | தரும்அப்பா! |
| காப்பாயே! | அறிவாயே! | |
| வாழ்வாயே! | வாழ்வாயே! | |

## ★ குறுவினா ★

**1. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?**

- காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.
- தூய்மையான காற்றைச் சவாசித்து வரவேண்டும்.

இவையே நம்மை நோய் அணுகாமல் காப்பவையாகும்.

**2. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?**

அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டுத் துன்படைய வேண்டிய நிலை ஏற்படும்.

## ★ சிறுவினா ★

**1. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

உடலில் உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். உடல் உறுதியற்ற நோயாளர்க்கு வாழும் இடமும் செல்வமும் இனிய வாழ்வு தாரா. சுத்தம் நிறைந்துள்ள எல்லா இடங்களிலும் சுகம் உண்டு. நாள்தோறும் நீங்கள் தூய்மையைப் போற்றிப் பாதுகாத்தால் நீடித்த வாழ்நாளைப் பெறலாம்.

காலையும் மாலையும் நடைப்பயிற்சி மேற்கொண்டு, நல்லகாற்றைச் சுவாசித்து வருவோரை நோய் அணுகாது. அவர் உயிரைக் கவர எமனும் அணுகமாட்டான். எனவே, நீங்கள் கூழைக் குடித்தாலும் குளித்தபிறகே குடித்தல் வேண்டும்! நீங்கள் வறுமையில் வாழ்ந்தாலும் இரவில் நன்றாக உறங்குதல் வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



அளவாக உண்ணாமல் அதிகமாக உண்டால் செரிமானம் தடுமாறி நாள்தோறும் நோய்வாய்ப்பட்டுப் பாயில் விழுவீர்கள். தூய்மையான காற்றும் நல்ல குடிநீரும் நன்கு பசித்த பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் காப்பாற்றும்! நூறாண்டு வாழ வைக்கும். அரிய நம் உடல் நலமோடு இருப்பதற்கான வழிகள் இவை என்பதை அறிவீர்களாக! ஆகவே நோய் வருமுன் காப்போம் உலகம் புகழ வாழ்வோம்!.

## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்பது ____________. **[விடை : பழமொழி]**
2. நோய் வந்தபின் தீர்க்க முயல்வதை விட வருமுன் காப்பதே __________. **[விடை : அறிவுடைமை]**
3. _________ உறுதி கொண்டவரே, உலகில் மகிழ்ச்சி உடையவராவார். **[விடை : உடலில்]**

### குறுவினா

**1. நல்ல உடல் நலத்திற்கு அடிப்படையாக அமைபவை எவை?**

நல்ல உடல் நலத்திற்கு அடிப்படையாக அமைபவை நல்ல உணவு, உடல் தூய்மை, உடற்பயிற்சி ஆகியவையே ஆகும்.

### சிறுவினா

**1. கவிமணி - ஆசிரியர் குறிப்பு வரைக.**

| | | |
|---|---|---|
| பெயர் | : | தேசிக விநாயகனார். |
| சிறப்புப் பெயர் | : | கவிமணி, ஆசிய ஜோதி. |
| ஊர் | : | குமரி மாவட்டம - தேரூர். |
| பணி | : | ஆசிரியர் (36 ஆண்டுகள்) |
| எழுதிய நூல்கள் | : | கதர் பிறந்த கதை, மருமக்கள் வழி மான்மியம், ஆசிய ஜோதி, மலரும் மாலையும், உமர்கய்யாம் பாடல்கள். |
| பெற்றோர் | : | சிவதானுப் பிள்ளை - ஆதிலட்சுமி. |

### சிந்தனை வினா

**நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகளாக நீங்கள் கருதுவன யாவை?**

- கைகளை நன்றாய்க் கழுவிய பிறகே உணவு உண்ண வேண்டும்.
- சத்துள்ள உணவுகளை உண்ணல் வேண்டும்.
- எளிய உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும்.
- உடலாலும் மனதாலும் தூய்மையாக இருத்தல் வேண்டும்.
- நம் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- துன்பம், கவலை இவைகளை மறந்து மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



இயல் மூன்று


உரைநடை உலகம்

# தமிழர் மருத்துவம்

(நேர்காணல்)

3WYKI5

## மனவரைபடம்




## தெரிந்து கொள்வோம்

நடைமுறையில் உள்ள மருத்துவ முறைகளுள் சில

- சித்த மருத்துவம்
- ஆயுர்வேத மருத்துவம்
- யுனானி மருத்துவம்
- அலோபதி மருத்துவம்

## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் மருத்துவரிடம் கேட்க விரும்பும் ஐந்து வினாக்களை எழுதுக.**

- பொதுவாக நோய் எதனால் ஏற்படுகிறது?
- நீரினால் பரவக்கூடிய நோய்களைக் கூறுங்கள்?
- நினைவாற்றலை அதிகப்படுத்த எந்தவிதமான உணவுகளை உட்கொள்ள வேண்டுமா?
- நோய்த் தொற்றுகள் வராமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?
- மருத்துவத்தில் எந்த மருத்துவம் சிறந்தது?

**2. உங்கள் பகுதிகளில் கிடைக்கும் மூலிகைகளின் மாதிரிகளைத் திரட்டி அவற்றின் பயன்களை எழுதிக் காட்சிப்படுத்துக.**

| | |
|---|---|
|  | **குப்பை மேனி :** சொறி சிரங்கினை நீங்கும் மாமருந்தாகும். இவற்றின் இலைகளுடன் உப்பு, மஞ்சள் சேர்த்து அரைத்துப் பூச வேண்டும் |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



| | |
|---|---|
|  | **துளசி :** இருமல், சளி, தலைவலி போக்கும் மாமருந்தாகும். இவற்றின் இலைகளை நீரில் கொதிக்க வைத்து கசாயமாகச் சாப்பிட வேண்டும். |
|  | **தூதுவளை :** இருமல், சளி, இளைப்பு நோய் நீங்கும். இவற்றின் இலைகளை உணவில் சேர்த்தும், அரைத்தும் துவையலாகவும் உண்ணலாம். குரல் வளம் சிறப்பாக அமையும். |

## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. தொடக்க காலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு ____________ பயன்படுத்தினர்.
அ) தாவரங்களை ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை
**[விடை : தாவரங்களை]**

2. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது ____________ நீட்சியாகவே உள்ளது.
அ) மருந்தின் ஆ) உடற்பயிற்சியின் இ) உணவின் ஈ) வாழ்வின்
**[விடை : உணவின்]**

3. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ____________.
அ) தலைவலி ஆ) காயச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக் கொதிப்பு
**[விடை : இரத்தக்கொதிப்பு]**

4. சமயலறையில் செலவிடும் நேரம் ____________ செலவிடும் நேரமாகும்.
அ) சுவைக்காக ஆ) சிக்கனத்திற்காக இ) நல்வாழ்வுக்காக ஈ) உணவுக்காக
**[விடை : நல்வாழ்வுக்காக]**

### ★ குறுவினா ★

**1. மருத்துவம் எப்போது தொடங்கியது?**

➢ மருத்துவத்தின் தொடக்கமானது மனிதர்களுக்கு நோய் வந்தபோது தாவரங்களைக் கொண்டும், அவர்களுக்கு கிடைத்த பொருட்களைக் கொண்டும் நோயைப் போக்கியுள்ளனர்.

➢ தாவரங்களின் இலை, வேர், பூ, பட்டை, கனி முதலியவற்றைக் கொண்டு மருந்தாகப் பயன்படுத்தி நோயினைப் போக்கியுள்ளனர்.

**2. நல் வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?**

➢ தினமும் 45 நிமிடத்தில் மூன்று கி.மீ. நடைபயணம் 15 நிமிடம் யோகா, தியானம் மற்றும் மூச்சுப்பயிற்சி செய்திடல் வேண்டும்.

➢ தினமும் ஏழு மணி நேரம் தூக்கமும், மூன்று லிட்டர் தண்ணீர் அருந்துதல் அவசியமான ஒன்றாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



- எங்கேயோ விளையும் ஆப்பிளைச் சாப்பிடுவதை விட நம் ஊர்களில் விளையும் கொய்யா, நாவல், இலந்தை, நெல்லி, பப்பாளி, வாழைப்பழங்கள் ஆகியவற்றைக் காலை உணவுக்கு முன் சாப்பிடலாம்.

**3. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?**

**தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன:**

- தாவரங்களின் வேர், தழை முதலியனவாகும்.
- உலோகங்களையும், தாதுப் பொருட்களையும், பாஷாணங்களையும் மருந்துகளாய் மாற்றிப் பயன்படுத்தினர்.
- நாட்டு வைத்தியமாகவும் பாட்டி வைத்தியமாகவும், மரபு சார்ந்த சித்த வைத்தியமாகவும் உணவு, பண்பாடு சார்ந்த மருத்துவமாகவும் தற்போது விரிந்திருக்கிறது.

## ★ சிறுவினா ★

**1. நோய்கள் பெருகக் காரணம் என்ன?**

- மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதல் காரணமாகும்.
- மாறிப்போன உணவு, மாசு நிறைந்த சுற்றுச்சூழல், மன அழுத்தம் இவை மூன்றும் குறிப்பிடத்தக்க காரணமாகும்.
- நிலத்தை உரங்களாலும் பூச்சிக் கொல்லிகளாலும் நச்சுப்படுத்தியதால் நோய்கள் பெருகக் காரணமாகும்.
- எது கேளிக்கை?, எது குதூகலம்? எது சிந்தனை? எது படிப்பு? என்ற புரிதல் இல்லாததால் மன அழுத்தம் ஏற்படுவது ஒரு காரணமாகும்.
- நம்முடைய வாழ்வியலைச் செம்மைப்படுத்தும் நுண்ணறிவைத் தொலைத்ததாலும், இயற்கையோடு இயைந்து வாழலாம் என்கிற அறிவை நாம் மறந்து விட்டதாலும் நோய்கள் பெருகின. இதுவே நோய்கள் பெருக மிக முக்கியமான காரணமாகும்.

**2. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?**

- நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதை விட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ளுங்கள்.
- சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழவைக்கும்.
- விலை உயர்ந்த உணவுதான் சரியான உணவு என்று நினைக்காமல், எளிதில் நம் ஊரில் கிடைக்கக்கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்கள் ஆகியனவற்றை நம் உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- கணினித் திரையிலும் கைபேசியாலும் விளையாடுவதைத் தவிர்த்துவிட்டு காற்றோட்டமாக ஓடியாடி விளையாடுங்கள்.
- உரிய நேரத்தில் தூங்குவதும், அதிகாலையில் விழித்தெழுவதும் போன்ற பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் எந்த நோயும் நம்மை நெருங்காது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## ★ நெடுவினா ★

**1. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

- இயற்கைச் சூழலுக்கு இசைந்த மருத்துவம் தமிழர் மருத்துவமாகும்.
- மூலிகை மருத்துவம், மருந்தில்லா மருத்துவம், அறுவை மருத்துவம் போன்றவை உடலை வளப்படுத்தி உள்ளத்தைச் சீராக்கும்.
- தமிழர் மருத்துவம் பண்பாட்டுக் கூறாகும் போது நாட்டு வைத்தியமாகவும், பாட்டி வைத்தியமாகவும், மரபு, உணவு சார்ந்த வைத்தியமாகவும் விரிந்திருக்கிறது.
- "வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே" என்றனர் சித்தர்கள்.
- தமிழர்கள் நோயினைப் போக்க தாவரங்களை மட்டும் அல்லாமல் உலோகங்களையும், தாதுப் பொருட்களையும், பாஷாணங்களையும் பயன்படுத்திப் போக்கினர்.
- தமிழர் மருத்துவம் சிகிச்சைக்குப் பின் நோய் மீண்டும் வராமல் இருக்கும் நிலையாகும். அதாவது "நோய்நாடி நோய் முதல் நாடி...." என்ற வள்ளுவரின் வாக்குப்படி நோயைப் பற்றி அறிந்தும் அதற்கான காரணங்களையும் அறிந்து ஒருவரை நோயில்லாத மனிதராக்குகிறது.

## ★ சிந்தனை வினா ★

**நோயின்றி வாழ நாம் என்னென்ன வழிகளைக் கையாளலாம்?**

- மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக்கூடிய சஞ்சீவி மருந்தாகக் கருதப்படுகிறது.
- 'நா'ச்சுவைக்காக உண்ணாமல் எளிதில் செரிக்கக்கூடிய உணவினை உண்ண வேண்டும்.
- உணவினை விரைவாக உண்ணுவதை விடுத்து, நன்றாக மென்று விழுங்க வேண்டும்.
- நாள்தோறும் நடைபயிற்சி, யோகா, தியானம், மூச்சுப் பயிற்சி முதலியவற்றை மேற்கொள்ள வேண்டும்.
- உரிய நேரத்தில் தூங்கியும், அதிகாலையில் விழித்தெழுவதும் பழக்கமாகிக் கொள்ள வேண்டும்.
- நோய்க்கு முதல் காரணம் உப்பு. உப்பு நிறைந்த பொருட்களை உண்ணுவதைத் தவிர்க்க வேண்டும்.
- தான் வாழும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும்.
- 'உணவே மருந்து மருந்தே உணவு' என்று வாழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள். அவர்களைப் போல் சரிவிகித சமச்சீர் உணவுகளை அளவறிந்து உண்ண வேண்டியது அவசியமாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## கூடுதல் வினாக்கள்

### நிரப்புக

1. அருந்தும் உணவே அருமருந்தென அறிந்தவர் ______________. **[விடை : தமிழ் மக்கள்]**
2. வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே என்றனர் ______________.
   **[விடை : சித்தர்கள்]**
3. மருந்து என்பதே உணவின் ______________ இருக்கிறது. **[விடை : நீட்சியாக]**
4. தமிழர் மருத்துவம் ___________ என்று அழைக்கப்படுகிறது. **[விடை : சித்த மருத்துவம்]**
5. தினமும் _____________ நிமிடம் யோகா செய்ய வேண்டும். **[விடை : 15]**

### குறுவினா

**1. நடைமுறையில் உள்ள மருத்துவ முறைகள் சிலவற்றைக் கூறுக.**

- சித்த மருத்துவம்
- ஆயுர்வேத மருத்துவம்
- யுனானி மருத்துவம்
- அலோபதி மருத்துவம்

**2. நம் ஊரில் விளையும் பழங்கள் சிலவற்றைக் கூறுக?**

கொய்யா, இலந்தை, நாவல், பப்பாளி, நெல்லி, வாழைப்பழங்கள் முதலியன.

**3. உங்களை நலமாக வாழவைக்கும் மூன்று நிலைகள் யாவை?**

- சரியான உணவு
- சரியான உடற்பயிற்சி
- சரியான தூக்கம்.

**4. இன்று நோய்கள் பெருகுவதற்கான முக்கிய காரணங்களைக் கூறுக?**

- மனிதன் இன்று இயற்கையைத் தவிர்த்துவிட்டு வந்ததுதான் முதல் காரணமாகும்.
- மாறிப்போன உணவு (விரைவு உணவு), மாசு நிறைந்த சுற்றுச்சூழல் மன அழுத்தம் ஆகிய மூன்றும் முக்கிய காரணமாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in




விரிவானம்

# இயல் மூன்று

# தலைக்குள் ஓர் உலகம்

ZIAIAU

## மனவரைபடம்




## தெரிந்து தெளிவோம்

மறதி என்பது சில நினைவுகள், மற்ற நினைவுகளுடன் குறுக்கிட்டு அவற்றை அழிப்பது என்று சிலர் கருதுகின்றனர். பொதுவாக நாம் உயிர் வாழத் தேவையான செய்திகளை நாம் விரைவில் மறப்பதில்லை. நம் பெயர், நண்பர்,உறவினர், மேலதிகாரிகளின் பெயர்கள், வீட்டுக்குப் போகும் வழி இவற்றையெல்லாம் நாம் விரைவில் மறப்பதில்லை.

தலையின் பகுதியில் நடைபெறும் சில தன்னிச்சையான செயல்களான வெளிச்சத்திற்கு ஏற்றபடி கண்களைத் திறப்பது, தலையைத் திருப்பும் போது கண்களை நிலை நிறுத்துவது ஆகியவற்றை எல்லாம் மூளையே பார்த்து கொள்கிறது ஆனால் ஏப்பம் விடுவது, இருமல், தும்மல், கொட்டாவி, வாந்தி ஆகியவற்றுக்கெல்லாம் மூளைக்குப் பதிலாக முதுகெலும்பு இருந்தாலே போதும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## நூல் வெளி

**சுஜாதா**வின் இயற்பெயர் **ரங்கராஜன்** என்பதாகும். இவர் சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், அறிவியல் புனைவுக்கதைகள், திரைப்படக் கதை வசனம் எனப் பலதுறைகளில் பணியாற்றியுள்ளார். **மின்னணு வாக்கு எந்திரம்** உருவாக்கும் பணியில் இவர் முக்கிய பங்கு ஆற்றியுள்ளார். **என் இனிய எந்திரா, மீண்டும் ஜீனோ, ஸ்ரீரங்கத்துத் தேவதைகள், தூண்டில் கதைகள்** உள்ளிட்ட பலநூல்களை எழுதியள்ளார். இவரது **தலைமைச்செயலகம்** என்னும் நூலிலிருந்து செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

**மூளையின் செயல்கள் குறித்துப் பிற நூல்களிலிருந்து தகவல்களைத் திரட்டி எழுதுக.**

**மூளையின் செயல்கள் :**

- மூளையின் செயல்திறன் பகலைவிட இரவில் அதிகமாக இருக்கும்.
- மூச்சு விடுதல், செரிமானம், இதயத் துடிப்பு, கொட்டாவி போன்ற செயல்பாடுகளை மூளை கட்டுப்படுத்துகிறது.
- நீண்டகால நினைவாற்றலில் சேமித்து வைக்கும் தகவல்களை மின் தகவல்களாய் மூளை 'ஹிப்போ கேம்பஸ்' என்ற இடத்தில் சேமித்து வைக்கிறது.
- மூளை நாம் பார்க்கும், கேட்கும், உணரும் செயல்களைச் சேமித்துக் கொள்கிறது. இதுவே நமது நினைவகத்தில் சேமிக்கும் தலமாகும்.
- ஒரு நபரை மீண்டும் மீண்டும் பார்க்கும்போது அவரைப் பற்றிய தகவல் நம் நரம்பு செல்களில் உறுதியாக பதியவைக்கப்பட்டு அந்த நபரைப் பற்றிய நினைவையும் நாம் மறக்காமல் இருப்போம்.

## மதிப்பீடு

**மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.**

**வலப்பக்க மூளை :**

- இடது பாதி அண்ணன் என்றால் வலது பாதி தம்பி.
- மூளையின் வலப் பகுதியால்தான் நாம் வடிவங்களை உணர்கிறோம்.
- கவிதை எழுதுவது, படம் போடுவது, நடனம் ஆடுவது, கடிப்பது போன்ற கலை தொடர்பானவை அனைத்தும் மூளையின் வலது பாதியில்தான் செயல்படுகிறது.
- வலப்பாதி சரியில்லை என்றால் ஓர் இடம் விட்டு இடம் செல்ல நாம் சிரமப்படுவோம்.
- வலப் பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் பாடகர்கள், நடிகர்கள், நடனக் கலைஞர்கள், இசைக் கருவி இசைப்பவர்களாக இருப்பார்கள்.

**இடப்பக்க மூளை :**

- மூளைக்குச் செல்லும் நரம்புகளில் இடவல மாற்றம் ஒன்று நிகழ்கிறது.
- வலப்பக்கச் செய்திகள் மூளையின் இடப்பக்கப் பகுதிக்கும், இடப்பக்கச் செய்திகள் வலப்பக்கப் பகுதிக்கும் செல்கின்றன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



- நம்மில் பெரும்பாலானவர்கள் வலக்கை பழக்கம் உள்ளவராக இருப்பதற்குக் காரணம் நம் மூளையின் இடப்பகுதியல் அதிகப்படியான பாதிப்பு இருப்பதால்தான்.
- மூளையின் இடப் பாதி பேச, எழுத, கணக்கிடவும், அறிவாற்றல், பிரச்சனைகளை அலசுதல், சதுரங்கம் போன்ற விளையாட்டுகளில் சிறந்து விளங்கவும் செயல்படுகிறது.
- நம் மொழி அறிவு சிறப்பாக அமைய இடப் பகுதியே காரணமாகும்.
- மூளையின் இடப்பகுதி ஆக்கிரமிப்பு அதிகமாக இருப்பவர்கள் பட்டயக் கணக்கர்களாகவும், கணக்கு ஆசிரியர்களாகவும் இந்திய ஆட்சிப் பணிக்குப் படித்தவர்களாகவும் இருப்பார்கள்.
- பேச்சைப் புரிதல், பேச்சுறுப்பு, இயக்குதல் ஆகியன இடப்பக்க மூளையால் நடைபெறுகின்றன.
- மூளையின் இடதும் வலதும் சரியான அளவில் கலந்து இருப்பவர்களும் உண்டு.

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612559 www.CBSEtips.in




கற்கண்டு

இயல் மூன்று

# எச்சம்

WJ5B4V

## மனவரைபடம்




## கற்பவை கற்றபின்

**1. 'வந்த' - என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களை எழுதுக.**

(எ.கா) வந்த மாணவன்.
வந்த மாடு.

i) வந்த நாய்.
ii) வந்த ஆடு.
iii) வந்த குழந்தை.
iv) வந்த சுமதி.

**2. 'வரைந்து' - என்னும் சொல்லைப் பயன்படுத்தி வெவ்வேறு தொடர்களை எழுதுக.**

(எ.கா) வரைந்து வந்தான்.
வரைந்து முடித்தான்.

அ) வரைந்து எழுதினான்.
ஆ) வரைந்து கொடுத்தான்.
இ) வரைந்து சென்றான்.
ஈ) வரைந்து தந்தான்.
உ) வரைந்து அழுதான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## மதிப்பீடு

### ★ சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக ★

1. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ______________ எனப்படும்.
   அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்
   **[விடை : எச்சம்]**
2. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் ______________.
   அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த
   **[விடை : பார்த்த]**
3. குறிப்பு வினையெச்சம் ______________ வெளிப்படையாகக் காட்டாது.
   அ) காலத்தை ஆ) வினையை இ) பண்பினை ஈ) பெயரை
   **[விடை : காலத்தை]**

### ★ பொருத்துக ★

1. நடந்து - அ) முற்றெச்சம்
2. பேசிய - ஆ) குறிப்புப் பெயரெச்சம்
3. எடுத்தனன் உண்டான் - இ) பெயரெச்சம்
4. பெரிய - ஈ) வினையெச்சம் **[விடை : 1 - ஈ, 2 - இ, 3 - அ, 4 - ஆ]**

### ★ கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக ★

நல்ல, படுத்து, பாய்ந்து, எறிந்த, கடந்து, வீழ்ந்த, மாட்டிய, பிடித்து, அழைத்த, பார்த்து.

| பெயரெச்சம் | வினையெச்சம் |
|---|---|
| நல்ல | படுத்து |
| எறிந்த | பாய்ந்து |
| வீழ்ந்த | கடந்து |
| மாட்டிய | பிடித்து |
| அழைத்த | பார்த்து |

### ★ சிறுவினா ★

**1. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**
- பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும்.
- எச்சம் பெயரெச்சம், வினையெச்சம் என இரு வகைப்படும்.

**2. ‘அழகிய மரம்’ - எச்ச வகையை விளக்குக.**
- ‘அழகிய மரம்’ என்பது பெயரெச்சமாகும்.
- அழகிய என்னும் சொல் மரம் என்ற பெயர்ச்சொல் கொண்டு முடிவதால் இது பெயரெச்சமாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in


**3. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.**

**சான்று :** வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.

இத்தொடரில் 'படித்தனள்' என்ற வினைமுற்றுச்சொல் படித்து என்ற வினையெச்சப் பொருளில் வந்து 'மகிழ்ந்தாள்' என்ற மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவதால், இது முற்றெச்சம் எனப்படும்.

இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப் பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் எனப்படும்.

---

**4. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.**

**வினையெச்சத்தின் வகைகள் :**

- தெரிநிலை வினையெச்சம்
- குறிப்பு வினையெச்சம்

**i) தெரிநிலை வினையெச்சம் :**

செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் வினையெச்சம் தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

**சான்று :** எழுதி வந்தான்.

**ii) குறிப்பு வினையெச்சம் :**

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாக உணர்த்தி வரும் வினையெச்சம் குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

**சான்று :** மெல்ல வந்தான்.

---

## கூடுதல் வினாக்கள்

## நிரப்புக

1. பாடும் பாடல் என்பது ______________ பெயரெச்சமாகும். **[விடை : எதிர்காலப்]**
2. முற்றாக இருக்கும் சொல் எச்சப் பொருளில் வருவது _________. **[விடை : முற்றெச்சம்]**

## சிறுவினா

**1. வினையெச்சம் என்றால் என்ன?**

- வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும்.
- **சான்று :** <u>படித்து</u> முடித்தான்.

---

**2. தெரிநிலை பெயரெச்சம் என்றால் என்ன?**

- செயலையும் காலத்தையும் வெளிப்படையாகத் தெரியுமாறு காட்டும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.
- **சான்று :** எழுதிய கடிதம்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**3. குறிப்புப் பெயரெச்சம் என்றால் என்ன?**

- செயலையோ, காலத்தையோ தெளிவாகக் காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பாகக் காட்டும் பெயரெச்சம் குறிப்புப் பெயரெச்சம் எனப்படும்.
- **சான்று:** சிறிய கடிதம்.

---

## மொழியை ஆள்வோம்

### கேட்க

**உடல்நலம் குறித்த விழிப்புணர்வு உரைகளின் ஒலிப்பதிவுகளைக் கேட்டு மகிழ்க.**

- பசித்தால் நேரம் கடத்தாதே
- வயிறு புடைக்க உண்ணாதே
- வெற்றுத் தரையில் படுக்காதே
- நொறுங்கத் தின்றால் நூறு வயது.
- உணவை விரைவாக விழுங்காமல் மென்று உண்.
- கண்ட இடங்களில் உமிழாதே
- உணவின் இடையில் நீரைப் பருகாதே.

---

### கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக

**உணவே மருந்து**

அனைவருக்கும் என் இனிய வணக்கம். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவாகும். உயிர், உடலோடு கூடிய நிலையில் எப்போதும் புறச் சூழலோடு போராடி வருகிறது. அது வெற்றி அடைவதே உடல் நலமாகும். தோல்வி அடைந்தால் நோயில் முடியும். இந்நோயைத் தீர்த்து இன்பமளிப்பதுவே மருந்து.

தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக் கூடிய சஞ்சீவி மருந்தாகக் கருதப்படுகிறது. இயற்கை உணவுடன் இயைந்த வாழ்க்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம் உடல் நலத்தினையும் உள நலத்தையும் பாதுகாக்க முடியும். நாகரிக வளர்ச்சியின் காரணமாக விரைவு உணவுகளை உண்டு நோயைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். உணவே மருந்து என்னும் நிலை மாறி மருந்தே உணவு என்கிற நிலைக்கு வந்துவிட்டோம். உணவு வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பதால் வலிமையைத் தருகிறது. வளர்ச்சி அளிக்கிறது. நாம் முன் உண்ட உணவு செரித்த பின்னரே உண்ண வேண்டும். இதை வள்ளுவரே "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்" என்கிறார்.

நோய் "வருமுன் காப்பதே" நல்லது. தூய்மையான காற்றும், நல்ல குடிநீரும், நன்கு பசித்த பிறகு உண்பதும் நம்மை நோய் அணுகாமல் வாழ வைக்கும். நோயில்லாமல் வாழும் மனிதனே துன்பம் இல்லாமல் வாழ்வான். எனவே, நோயின்றி வாழ்வோம் வாழ்நாள் முழுவதும் என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



## அறிந்து பயன்படுத்துவோம்

### உவமைத் தொடர்கள்

நாம் பேச்சிலும் எழுத்திலும் கருத்துகளை எளிதாக விளக்குவதற்காகச் சில தொடர்களைப் பயன்படுத்துவோம். அவை உவமைத் தொடர்கள் எனப்படும். ஒவ்வொரு உவமைத் தொடருக்கும் தனிப் பொருள் உண்டு.

(எ.கா) 1. மடை திறந்த வெள்ளம் போல் - தடையின்றி மிகுதியாக.
திருவிழாவைக் காண மடைதிறந்த வெள்ளம் போல் மக்கள் வந்தனர்.

2. உள்ளங்கை நெல்லிக்கனி போல - வெளிப்படைத் தன்மை
பாரதியின் பாடல்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போல அனைவருக்கும் விளங்கும்.

## பொருத்துக

1. காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்தது போல - அ) ஒற்றுமையின்மை
2. கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போல - ஆ) பயனற்ற செயல்
3. பசு மரத்து ஆணி போல - இ) தற்செயல் நிகழ்வு
4. விழலுக்கு இறைத்த நீர் போல - ஈ) எதிர்பாரா நிகழ்வு
5. நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல - உ) எளிதில் மனத்தில் பதிதல்

**[விடை : 1-இ, 2-ஈ, 3-உ, 4-ஆ, 5-அ]**

## உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க

1. குன்றின் மேலிட்ட விளக்கைப் போல
   **விடை :** திருக்குறளின் புகழ் **குன்றின் மேலிட்ட விளக்கைப் போல** உலகமெங்கும் பரவியுள்ளது.
2. வேலியே பயிரை மேய்ந்தது போல
   **விடை :** பாதுகாப்பு தரவேண்டிய காவல் படையினரே மீனவர்களைச் சுடுவது **வேலியே பயிரை மேய்வது போல** ஆகும்.
3. பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல
   **விடை :** நேற்று பேசிய பேச்சாளரின் பேச்சு **பழம் நழுவி பாலில் விழுந்தது போல** இனிமையாக இருந்தது.
4. உடலும் உயிரும் போல
   **விடை :** **உடலும் உயிரும் போல** கபிலரும் பரணரும் நட்புடன் திகழ்ந்தனர்.
5. கிணற்றுத் தவளை போல
   **விடை :** மணிகண்டன் படித்திருந்தாலும், **கிணற்றுத் தவளை போல** அறியாமையுடன் இருந்தான்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in


## கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக

### நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

[முன்னுரை - நோய் வரக் காரணங்கள் - நோய் தீர்க்கும் வழிமுறைகள் - வருமுன் காத்தல் - உணவும் மருந்தும் - உடற்பயிற்சியின் தேவை - முடிவுரை]

**முன்னுரை :**

"நோய்க்கு இடங் கொடேல்" என்பது ஔவையின் அறிவுரை. "சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்" என்பர் ஆன்றோர். நாம் அனைத்துச் செல்வங்களைப் பெற்றிருந்தாலும் நோயில்லாமல் வாழ்வதே குறைவற்ற செல்வமாகக் கருதலாம். இவ்வுலகில் நீண்ட நாள் வாழ உடல் நலம் பேணி பயனுள்ள வாழ்க்கை வாழ இயலும்.

**நோய் வரக் காரணம் :**

மனிதன் இயற்கையை விட்டு விலகி வந்ததுதான் முதல் காரணமாகும். சுற்றுச்சூழல் சீர்கேடுகளால் சுவாசக் கோளாறுகள் உருவாகின்றன. நீர் மாசு காரணமாக வயிற்றுக் கோளாறுகளும், நிலம் மாசு காரணமாக ஒவ்வாமையும் ஏற்படுகிறது. உணவுப் பழக்கவழக்கம், உடற்பயிற்சியின்மை ஆகியனவும், நாம் உண்ணும் உணவானது உரங்களாலும் பூச்சிக்கொல்லிகளாலும் நச்சுப்படுத்தப்பட்டு நோயின் பிறப்பிடமாய் மாறிவிட்டன.

**நோய் தீர்க்கும் வழிமுறைகள் :**

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்கிறார் வள்ளுவர்.

முறையான உடற்பயிற்சி, மூச்சுப் பயிற்சி, தியானம், யோகா, நடைபயிற்சி மேற்கொள்ள வேண்டும். தூய்மையான ஆடை, சத்துள்ள உணவு, பசித்த பின் அளவாக உண்ண வேண்டும். நோயின் தன்மைக்கு ஏற்ப நோயினைப் போக்க தமிழ் மருத்துவமும் உள்ளன. உடலின் உள்ளுறுப்பு நோய்களைப் போக்க சில நேரங்களில் அறுவை மருத்துவமும் தேவைப்படுகிறது. மூலிகை மருத்துவம் மூலமும் நாம் நோய்களைத் தீர்க்கலாம்.

**வருமுன் காத்தல் :**

"வருமுன் காப்போம்" என்னும் பொன்மொழிக்கு ஏற்ப நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதைவிட வருமுன் காக்கும் வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள வேண்டும். சரியான நேரத்தில் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் நோய்களைத் தடுக்க முடியும்.

**உணவும் மருந்தும் :**

ஒருவர் உண்ணும் உணவு ருசிக்காக உண்ணாமல் உடல் நலத்துக்காக உணவுகளை உண்ண வேண்டும். பச்சைக் காய்கறிகள், கீரைகள், முட்டை, பால், தேன், இறைச்சி முதலிய உணவுகள் உடலுக்கு ஊட்டம் தரும் உணவாகும். இது மட்டும் அல்லாமல் "உணவே மருந்து" என்பதை உணர்ந்து இயற்கையாகக் கிடைக்கும் உணவுப் பொருட்களை உண்ண வேண்டும்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



**உடற்பயிற்சியின் தேவை :**

"ஓடி விளையாடு பாப்பா" என்கிறார் பாரதியார். நன்கு உடற்பயிற்சி, மூச்சப் பயிற்சியும் தேவை. உடற்பயிற்சியினால் நம் உடலில் உள்ள தேவையற்ற கழிவுகள் வெளியேறும் நோயும் நீங்கும் என்பதை உணர்த்தவே கவிமணி அவர்கள் "காலை மாலை உலாவி நிதம் காற்று வாங்கி வருவோரின் காலைத் தொட்டுக் கும்பிட்டுக் காலன் ஓடிப்போவானே" என்கிறார். பாரதியார் அவர்கள் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவே "மாலை முழுவதும் விளையாட்டு" என்கிறார்.

**முடிவுரை :**


"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். "உடலில் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம்" என்கிறார் கவிமணி. எனவே, மனிதன் இளமை முதல் உடல் உறுதியும் உள் உறுதியும் பெற்று வாழ ஒழுக்கமான வாழ்க்கை முறையும் துணை நிற்கும் உடலைப் பேணுவோம். உயிரைக் காப்போம். நோயற்ற வாழ்வு வாழ்வோம்.

## மொழியோடு விளையாடு

### கீழ்க்காணும் படம் சார்ந்த சொற்களை எழுதுக

| | |
|---|---|
|  | 1) மிளகு, 2) சீரகம், 3) வெந்தயம், 4) சோம்பு, 5) பூ, இலை 6) தைலம், 7) சுக்கு, 8) கிராம்பு, 9) அண்ணாச்சி பூ, 10) துளசி, 11) மிளகாய், 12) மல்லி விதை, 13) வேம்பு, 14) கற்றாழை, 15) ஏலக்காய், 16) பூண்டு, 17) பட்டை, 18) உரல், 19) உலக்கை, 20) வெற்றிலை, 21) புதினா. |

### வட்டத்திலுள்ள பழமொழிகளைக் கண்டுபிடித்து எழுதுக




- முயற்சி திருவினை ஆக்கும்.
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
- பசித்துப் புசி.
- அறிவே ஆற்றல்.
- சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்.
- அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு.
- வருமுன் காப்போம்.
- பருவத்தே பயிர்செய்.
- சுத்தம் சோறு போடும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in


## நிற்க அதற்குத் தக

**என் பொறுப்புகள் ....**

1. காலை மாலை உடற்பயிற்சி செய்வேன்.
2. உரிய நேரத்தில் உறங்கச் செல்வேன்; உரிய நேரத்தில் விழித்தெழுவேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| நோய் | - Disease | பக்கவிளைவு | - Side Effect |
| மூலிகை | - Herbs | நுண்ணுயிர் முறி | - Antibiotic |
| சிறுதானியங்கள் | - Millets | மரபணு | - Gene |
| பட்டயக் கணக்கர் | - Auditor | ஒவ்வாமை | - Allergy |

www.Padasalai.Net


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612959 www.CBSEtips.in



# இயல் 3

## அலகுத் தேர்வு 1

**மதிப்பெண்கள்: 40**

**I. நிரப்புக.** **5 x 1 = 5**

1. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ____________.
2. 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ___________.
3. வேர்பாரு; தழைபாரு மிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே என்று கூறியவர்கள் _______.
4. தமிழர் மருத்துவத்தில் மருந்து என்பது _____________ நீட்சியாகவே உள்ளது.
5. குறிப்பு வினையெச்சம் _____________ வெளிப்படையாகக் காட்டாது.

**II. பொருத்துக :** **4 x 1 = 4**

6. நடந்து - அ) முற்றெச்சம்
7. பேசிய - ஆ) குறிப்புப் பெயரெச்சம்
8. எடுத்தனன் உண்டான் - இ) பெயரெச்சம்
9. பெரிய - ஈ) வினையெச்சம்

**III. குறுவினா:** **4 x 2 = 8**

10. நம்மை நோய் அணுகாமல் காப்பவை எவை?
11. நோயின் மூன்று வகைகள் யாவை?
12. மருத்துவம் எப்போது தொடங்கியது?
13. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

**IV. சிறுவினா:** **2 x 31/2 = 7**

14. நோய்கள் பெருகக் காரணம் என்ன?
15. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

**V. அடிபிறழாமல் எழுதுக:** **1 x 6 = 6**

16. உடலின் உறுதி .... எனத் தொடங்கும் 'வருமுன் காப்போம்' பாடலை எழுதுக.

**VI. விடையளி :** **1 x 6 = 6**

17. மூளையின் வலது, இடது பாகங்களின் செயல்பாடுகள் பற்றித் தொகுத்து எழுதுக.

**VII. மொழிப்பயிற்சி :** **4 x 1 = 4**

18. கலைச்சொல் கூறுக : Allergy.
19. உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க :
 உடலும் உயிரும் போல....
20. சந்திப்பிழை நீக்கி எழுதுக :
 உணவு எப்படி பக்க விளைவுகளை தருவதில்லையோ அதே போல சித்த மருந்துகளும் பக்க விளைவுகளை ஏற்படுத்துவதில்லை.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net FOR ORDERS CONTACT: 8925612939 www.CBSEtips.in



## அலகுத் தேர்வு 2

**மதிப்பெண்கள்: 40**

**I. நிரப்புக.** **5 x 1 = 5**

1. தாம் + இனி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________.
2. காந்தியடிகள் ____________ போற்ற வாழ்ந்தார்.
3. சமையலறையில் செலவிடும் நேரம் ___________ செலவிடும் நேரமாகும்.
4. ‘பார்த்த’ என்ற சொல் ___________ எச்சமாகும்.
5. மெல்ல வந்தான் என்னும் தொடர் ___________ தைக் குறிக்கிறது.

**II. பொருத்துக :** **4 x 1 = 4**

6. தெளிவு - அ) உலகம்
7. மட்டு - ஆ) துன்பம்
8. வையம் - இ) நற்காட்சி
9. பிணி - ஈ) அளவு

**III. குறுவினாக்கள் :** **4 x 2 = 8**

10. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமைகளாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?
11. நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?
12. பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
13. முற்றெச்சத்தைச் சான்றுடன் விளக்குக.

**IV. சிறுவினாக்கள் :** **2 x 4 = 8**

14. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
15. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

**V. அடிபிறழாமல் எழுதுக :** **1 x 5 = 5**

16. பேர்தற்கு .... எனத் தொடங்கும் ‘நோயும் மருந்தும்’ பாடலை எழுதுக.

**VI. விடையளி :** **1 x 7 = 7**

17. “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”

**VI. மொழிப்பயிற்சி :** **5 x 1 = 5**

18. கலைச்சொல் எழுதுக : Side Effect
19. உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க :
    கிணற்றுத் தவளை போல
20. மோனையை எடுத்து எழுதுக :
    காலை மாலை உலாவிநிதம் காற்று வாங்கி வருவோரின்
    காலைத் தொட்டுக் கும்பிட்டுக் காலன் ஓடிப் போவானே!



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


எங்கள் வெளியீடுகள்

| | |
|---|---|
| பெங்குயின் தமிழ் அமுது | Std : VI - XII |
| பெங்குயின் வினா-வங்கி | Std : X, XI, XII |
| English Guide & Work Book | Std : VI - XII |
| English Practice Book & Question Bank | Std : X, XI, XII |
| அறிவியல், சமூக அறிவியல் | Std : IX, X |

ஆர்டர்கள் தொடர்புக்கு

8925612359 - 8643007972
7010414574 - 8248737898

பெங்குயின் பப்ளிகேஷன்

62 - C ஆண்டாள்புரம், மாயாண்டிப்பட்டி தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் 626 125, விருதுநகர் மாவட்டம்

89256 12359 86430 07972
7010414574 - 8248737898

penguinpub.2014@gmail.com
www.penguinbooks.in

விலை: 246


Kindly send me your study materials to padasalai.net@gmail.com